இஸ்லாத்தை கட்டாயமாகத் திணிக்க முடியுமா?

# திருக்குர்ஆன் நற்செய்தி மலர்

THIRU QURAN NARCHEYDHI MALAR -2014 OCT

மலர்: 8 இதழ்: 1 அக்டோபர் 2014 விலை: ரூ. 5



## பெண்ணின் ஆடைகளில் தள்ளுபடி!



UPTO 50% OFF

(NOT ON PRICE)

# ஆடையணிவதின் ஒழுக்கங்கள்

● **ஆடை இறைவனின் அருளாகும்**

ஆதமுடைய மக்களே! உங்கள் வெட்கத் தலங்களை மறைக்கும் ஆடையையும், அலங்காரத்தையும் உங்களுக்கு அருளியுள்ளோம். (இறை) அச்சம் எனும் ஆடையே சிறந்தது. அவர்கள் சிந்திப்பதற்காக இது அல்லாஹ்வின் சான்றுகளில் உள்ளது. (அல்குர்ஆன் 7 : 26)

வெப்பத்திலிருந்து உங்களைக் காக்கும் சட்டைகளையும், போரில் உங்களைக் காக்கும் கவச உடைகளையும் அவன் ஏற்படுத்தினான். நீங்கள் கட்டுப்பட்டு நடப்பதற்காக இவ்வாறே அவன் தனது அருட் கொடையை உங்களுக்கு முழுமைப்படுத்தினான் (அல்குர்ஆன் 16 : 81 )

● **அழகிய ஆடை பெருமையா?**

இப்னு மஸ்வூத் (ரலி) அவர்கள் நபி (ஸல்) அவர்களிடம் "ஒரு மனிதர் தன்னுடைய ஆடையும், காலணியும் அழகாக இருக்க வேண்டும் என விரும்புகிறார். இது பெருமையா? எனக் கேட்டார்கள். அதற்கு நபியவர்கள் "இறைவன் அழகானவன், அவன் அழகை விரும்புகிறான்" என்று கூறினார்கள்.
நூல் : முஸ்லிம் (131)

● **தூய்மையான ஆடையை அணிய வேண்டும்**

நபி (ஸல்) அவர்கள் ஒரு மனிதர் அழுக்கான ஆடை அணிந்தவராக நிற்பதைப் பார்த்தார்கள். அப்போது "இவர் தனது ஆடையை தூய்மைப்படுத்தக் கூடிய ஒரு பொருளை பெற்றுக் கொள்ளவில்லையா?" என்று கூறினார்கள்

அறிவிப்பவர் : ஜாபிர் (ரலி) நூல் : அபூதாவூத் (3540)

● **ஆடையணியும் போது வலது புறமாகத் துவங்குதல்**

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: நீங்கள் ஆடையணியும் போதும், உளு (தொழுகைக்கு முன்னதாகச் செய்யப்படும் அங்கத்தூய்மை) செய்யும் போதும் உங்களுடைய வலது புறங்களிலிருந்தே ஆரம்பம் செய்யுங்கள்.

அறிவிப்பவர் : அபூஹுரைரா (ரலி) நூல் : அபூ தாவூத் (3612)

● **புத்தாடை அணியும் போது கூறும் பிரார்த்தனை**

நபி (ஸல்) அவர்கள் புத்தாடை அணியும்போது என்று அந்த ஆடையின் பெயரைக் கூறி பிறகு "இறைவா, இந்த ஆடையை எனக்கு அணிவித்த உனக்கே புகழ் அனைத்தும். இந்த ஆடையின் நன்மையையும் இது எதற்காக தயாரிக்கப்பட்டதோ அதன் நன்மையையும் உன்னிடம் நான் கேட்கிறேன். இதனுடைய தீமையையும் இது எதற்காக தயாரிக்கப்பட்டதோ அதனுடைய தீங்கிலிருந்தும் உன்னிடம் நான் பாதுகாவல் தேடுகிறேன்." என்று கூறுவார்கள்

அறிவிப்பவர் : அபூ ஸயீத் (ரலி) நூல் : திர்மிதி (1689 )

அளவற்ற அருளாளனும் நிகரற்ற அன்புடையோனுமாகிய

அல்லாஹ்வின் திருப்பெயரால்...

# திருக்குர்ஆன் நற்செய்தி மலர்

THIRU QURAN NARCHEYDHI MALAR -2014 OCT

மலர்: 8 இதழ்: 1 அக்டோபர் 2014 விலை: ரூ. 5

## பொருளடக்கம்

| | |
|---|---|
| பெண்ணின் ஆடைகளில் தள்ளுபடி! | 2 |
| மனம்போன போக்கிலே ஆடை அணியமுடியுமா? | 5 |
| வாழ்வே மாயமா? | 7 |
| ஆடை வரம்புகளை மீறினால்... | 9 |
| மதீனாவில் ஓடிய மது ஆறு. | 11 |
| கதவைத் தட்டும் முன் திறந்து வை | 13 |
| விபச்சாரத்தின் பக்கமே நெருங்காதீர் | 14 |
| இஸ்லாத்தை கட்டாயமாகத் திணிக்க முடியுமா? | 17 |
| ஏனிந்த எதிர்ப்பலைகள்? | 19 |
| மனித மூளை என்ற பேரற்புதம் | 22 |
| வாசகர் எண்ணம் | 24 |

published from
**House of Peace,**
PO Box No.1726
# 8, 4th main, 2nd cross, LB Sastry Nagar,
Bangalore 560 017 - Ph. 9886001357

**ஆசிரியர் உரை**

# பெண்ணின் ஆடைகளில் தள்ளுபடி!

ஆடை அணிவதன் முக்கிய நோக்கம் மானத்தை மறைப்பதே! அட்டைப்படத்தில் காணும் ஆண்களின் உடைகளுக்கும் பெண்களின் உடைகளுக்கும் உள்ள வேறுபாட்டை சற்று கவனியுங்கள். ஆண்களின் உடைகள் உடலை முழுமையாக மறைக்கும் வண்ணமும் உடலோடு ஒட்டாமல் காற்றோட்டம் உள்ளவையாகவும் ஆரோக்கியமானவையாகவும் காண்கிறோம். ஆனால் ஆண்களை விட பலவீனமானதும் மென்மையானதும் கவர்ச்சிகரமானதும் ஆன உடலமைப்பு கொண்ட பெண்கள் அணியும் ஆடைகள் பலவிதமான ஜன்னல்களோடும் உடலோடு இறுக்கமாக ஒட்டியவையாகவும் நீளம் குறைந்தவையாகவும் கைகால்கள் இல்லாதவை யாகவும் இருப்பதைக் காண்கிறோம். சிறுவயது குழந்தைகளின் உடையில் உட்பட, ஏன் பள்ளிக்கூட சீருடைகளில் கூட இது பின்பற்றப்படுவதைக் கண்டுவருகிறோம். இந்த வித்தியாசத்திற்கு என்ன காரணம்?

இவை உஷ்ணத்தைத் தாங்கமுடியாததால் காற்றோட்டத்திற்காக திறக்கப்பட்ட ஜன்னல்களா? துணிப் பற்றாக்குறை காரணமாக அவ்வாறு தைக்கப்பட்டனவா? அல்லது வறுமை காரணமா? .... இப்படி இதற்கான பதிலை எப்படி சிந்தித்தாலும் இவை எதுவுமே அல்ல என்பதை நாம் அறிவோம். ஆனால் நாம் ஒரேயொரு காரணத்தை மட்டும் உறுதியாக சொல்ல முடியும்.... அது என்ன?

ஆம், பெண்ணின் கவர்ச்சிகரமான உடல் உறுப்புக்கள் பொது மக்களின் அதாவது அந்நிய ஆண்களின் பார்வைக்கு விருந்தாக வேண்டும் என்ற ஒரே நோக்கமே இதன் பின்னணியில் உள்ளது என்பதை யாரும் மறுப்பதற்கில்லை! பெண் என்பவள் பலவீனமானவள், அவளது உடலின் கவர்ச்சி கண்டு ஏதாவது அந்நிய ஆண் ஈர்க்கப்பட்டால் அங்கு அவளது கற்பும் தொடர்ந்து உயிரும் பறிபோக வாய்ப்பு உண்டு என்பதை நாம் அனைவரும் அறிந்தே இருக்கிறோம். அதனால் இந்த விதமான ஆடைகள் பாதுகாப்பு அற்றவை என்பதை நிரூபிக்க சான்றுகள் தேவையில்லை. அன்றாடம் தொடர்ந்து அதிகரித்துவரும் பெண்களுக்கு எதிரான பாலியல் குற்றங்களே இதை உறுதிப்படுத்துகின்றன.

● தேசிய குற்றவியல் பதிவகத்தின் (National Crimes Records Bureau) தரும் புள்ளிவிவரப்படி நம் நாட்டில் ஒவ்வொரு நாளும் 65 பெண்கள் கற்பழிக்கப் படுகிறார்கள். (அதாவது ஒவ்வொரு 22 நிமிடங்களுக்கும் ஒரு பெண் வீதம் இதற்கு பலியாகிறார்கள்). இந்த குற்றங்களுக்குப் பின்னால் பல காரணங்கள் இருந்தாலும் பெண்களின் ஆடைக்குறைப்பு ஒரு முக்கிய காரணமாக உள்ளது.

● நமது மகளோ அல்லது உடன்பிறந்த சகோதரியோ அல்லது பெற்றெடுத்த தாயோ அல்லது கட்டிய மனைவியோ மேற்கூறப்பட்ட பாதிப்புகளுக்கு உள்ளாகக் கூடாது என்பதில் நாம் குறியாக இருக்கிறோம். நமது குடும்ப

அமைப்பு சீர்குலையக் கூடாது என்பது நம்மில் ஒவ்வொருவரதும் விருப்பம். நமது குடும்பத்து பெண்கள் யாரும் அந்நியரால் காதலிக்கப் படுவதையோ அவர்களோடு ஓடிப் போவதையோ கற்பழிக்கப்படுவதையோ அந்நியனின் கர்ப்பத்தை சுமப்பதையோ நம்மில் பொறுப்புணர்வு கொண்ட யாருமே விரும்பமாட்டோம். ‘விருப்பம்போல் ஆடை அணிவது பெண்களின் உரிமை!’ என்று வாய்கிழியப் பேசும் பெண்ணுரிமை வாதிகளாக இருந்தாலும் மாதர் சங்கங்களின் பொறுப்புதாரிகளாக இருந்தாலும் தங்கள் குடும்பத்தினர் விடயத்தில் இதை விட்டுக்கொடுக்க மாட்டார்கள் என்பதை நன்றாகவே நாம் அறிவோம். ஆக, யாருமே இது நம் குடும்பத்தில் நடைபெறுவதை விரும்பாவிட்டாலும் இத்தீமைக்கு முக்கிய காரணமான ஆடைக்குறைப்பை ஏன் கண்டுகொள்ளாமல் இருக்கிறோம்?

● ஒரு சம்பவம்..... ஒரு கணவன் – மனைவி இருவரும் பஸ்ஸில் பயணிக்கிறார்கள்... மனைவிக்கு முன் புறத்தில் உள்ள பெண்கள் இருக்கையில் இடம் கிடைத்து உட்கார்ந்து கொண்டு வருகிறார். கணவன் பின்னால் நின்று கொண்டு வருகிறார். மனைவிக்குப் பின்னுள்ள இருக்கையில் இரண்டு இளைஞர்கள் மனைவியின் இரவிக்கையின் பின்னால் உள்ள ஜன்னல் வழியாகக் காட்சியளித்துக் கொண்டிருக்கும் முதுகுப் பகுதியைக் கண்கொட்டாமல் பார்த்துக் கொண்டே வருகிறார்கள். அவ்வப்போது கண்ஜாடைகளும் விஷமப் புன்னகையும் செய்து கொள்கிறார்கள். இதை அருகில் நின்று பார்த்துக்கொண்டு வரும் கணவனின் நிலை எப்படி இருக்கும் சிந்தித்துப்பாருங்கள்! ..... இதை ஏன் அவரால் தடுக்க முடியவில்லை?

● பொதுவாகவே நமக்கு சொந்தமான ஒரு விலைமதிப்புள்ள ஒரு பொருளையோ அல்லது பணத்தையோ வெளியே எடுத்துச் செல்லவேண்டி வந்தால் அதை பத்திரமாக பொதுமக்கள் பார்வையில் படாமல் இருக்க மறைத்துதான் எடுத்துச் செல்வோம். காரணம் அதைக் கவர்ந்தெடுக்க கள்வர்கள் வெளியே காத்திருக்கிறார்கள் என்பதை நாம் நன்கு உணர்ந்திருக்கிறோம். இங்கு நம் அன்புக்குரியவர்களின் உடலை காட்சிக்கு வைத்து காமுகர்களுக்கு அழைப்பு கொடுப்பதுபோலல்லவா அமைகிறது பெண்களின் ஆடை? இவ்வாறு நம் பணத்தை விட,செல்வத்தை விட விலைமதிக்கமுடியாத நம்மவர்களின் கற்பையும் உயிரையும் துச்சமாகக் கருதச் செய்வது எது?

இவ்வாறு நமக்கும் குடும்பத்துக்கும் சமூகத்துக்கும் பெரும் ஆபத்தானது என்று அறிந்தும் பெண்களின் ஆடைக்குறைப்புக் கலாச்சாரத்தைக் கட்டுப்படுத்த ஏன் சமூக ஆர்வலர்கள் யாரும் முன்வருவதில்லை? பொதுமக்களும் அரசாங்கமும் சரி யாருமே இதில் அக்கறை காட்டுவதில்லை? தனிமனிதர்களும் ஆன்மீக தலைவர்களும்கூட மவுனம் சாதிக்கிறார்கள்? காரணம்வேறு ஒன்றுமல்ல... இதோ இதுதான்...

***ஷைத்தான் என்ற மனிதகுலத்தின் விரோதியின் சூழ்ச்சியே அது!***

மனித மனங்களில் ஊடுருவி மானக்கேடானவற்றை எல்லாம் நம்மைக் கொண்டு

செய்வித்து நம் குடும்ப சீரமைப்பைக் குலைத்து நம்மை அமைதி இழக்கச் செய்கிறான் அவன்! உண்மையில் பெண் என்பவள் ஆணைவிட பாதுகாப்பாக ஆடை அணியவேண்டியவள். ஆனால் புதுமைக் கலாச்சாரத்தின் பெயரிலும், கவர்ச்சி மாயை ஊட்டியும் போலியான 'பெண்ணுரிமை' என்ற பெயரிலும் மூளைசலவை செய்து அவளை துகிலுரித்து காட்சிப்பொருளாக்கியும் கடைச்சரக்காக்கியும் மாற்றுகிறான் ஷைத்தான்! அதற்கு ஏற்ப பத்திரிகைகளும் தொலைக்காட்சிகளும் சினிமாக்களும் பெண்ணின் ஆடைகளுக்கான இலக்கணங்களை வடித்துக் கொடுகின்றன. வெட்க உணர்வுகளும் நீதி நியாயங்களும் மழுங்கடிக்கப்பட்டு அவற்றை அப்படியே மறுகேள்வி கேட்காமல் மக்கள் பின்பற்ற குடும்பத்தின் புனிதம் காற்றில் பறக்கின்றது.... சமூகத்தில் கள்ளக்காதல்களும் கற்பழிப்புகளும் கொலைகளும் கருக்கொலைகளும் தந்தைகள் இல்லா தலைமுறைகள் வளர்வதும் சகஜமாகின்றன. அவனது சதிவலையில் சமூகமும் தம்மையறியாமலே வீழ்ந்து மக்கள் தங்கள் இம்மை வாழ்வின் மகிமையையும் தொலைத்துவிட்டு மறுமை வாழ்வையும் கேள்விக்குறியாக்கி வருகிறார்கள்.

## உலகின் விபரீதப் போக்கை மாற்றுவோம் வாரீர்!

மக்களின் இந்த விபரீதமான போக்கை மாற்றி அமைக்கவேண்டிய பொறுப்பு இறைவிசுவாசிகளை சார்ந்தது. ஆம் அன்பர்களே, இது இறைவனுக்கு சொந்தமான உலகம். இதை ஒரு தற்காலிக பரீட்சைக் கூடமாக இறைவன் படைத்துள்ளான். இதில் நாம் செய்யும் ஒவ்வொரு செயல்களும் பதிவாகின்றன. அவற்றுக்கு இறுதித் தீர்ப்பு நாளன்று விசாரணையும் உண்டு. இவ்வுலகில் நாம் இறைவனுக்குக் கீழ்படிந்து வாழக் கடமைப்பட்டுள்ளோம். இதில் தான்தோன்றித்தனமாக வாழவோ சட்டங்கள் இயற்றவோ இறைவன் மனிதனுக்கு அதிகாரம் வழங்கவில்லை என்பதை நாம் அடிப்படையாக உணரவேண்டும். அவன் விதித்த கட்டளைகளை மீறி வாழ்ந்ததன் விளைவுகளே இன்று நாம் கண்டுவரும் கொடுமைகள். ஒருவேளை நாம் இவ்வுலகில் நம் அத்துமீறல்களுக்கான தண்டனையைப் பெறாவிட்டாலும், மறுமை வாழ்வில் அதைப் பெற்றேயாக வேண்டும்.

இவ்வுலக வாழ்வு அமைதிமிக்கதாக அமைய வேண்டுமானால் இறைவன் நமக்கு பரிந்துரைக்கும் வாழ்க்கை நெறிப்படி நாம் வாழ முற்படவேண்டும். அதில் தனிமனித நல்லொழுக்கம், ஆண் பெண் உறவு வரம்புகள், திருமணம் உறவு, கணவன் மனைவி, தாய், தந்தை, குழந்தைகள், உறவினர் போன்றோரின் கடமைகள் மற்றும் உரிமைகள் என அனைத்தும் வரையறுக்கப்பட்டு வழங்கப் பட்டுள்ளன. இதுவே இஸ்லாம் என்று அரபு மொழியில் அறியப்படுகிறது. இறைவன் வழங்கும் இந்த நெறிமுறைகளை மீறினால் இவ்வுலக வாழ்வில் குழப்பங்களும் கலகங்களும் நிறையும் என்பது மட்டுமல்ல... இவற்றை மீறுவோருக்கு அவர்கள் இவ்வுலகில் விளைவித்த குழப்பங்களுக்கு தண்டனையாக நரக வேதனையும் கிடைக்கும்.

# மனம்போன போக்கில் ஆடை அணியலாமா?

● ஆடை அணிவதும் அரைகுறையாக அணிவதும் அல்லது அறவே அணியாததும் எங்கள் உரிமை! அதைக்கேட்க நீங்கள் யார்?

● திருமணம் செய்துகொள்வதும் செய்யாமலே சேர்ந்து வாழ்வதும் அல்லது விபச்சாரம் செய்வதும் தனிமனித உரிமை, அதில் தலையிட உங்களுக்கு ஏது உரிமை?

....... என்று சிலர் சிந்திக்கலாம். வாதிக்கவும் செய்யலாம். ஆனால் நாம் ஒரு சமூகமாக இருப்பதால் நமது தனிமனித உரிமைகள் பிறருக்கும் சமூகத்துக்கும் பாதிப்புகள் ஏற்படாத வகையில் இருந்தால் மட்டுமே அவற்றை அனுமதிக்க முடியும் என்பது தெளிவு. ஆடை விவகாரமும் சரி, அந்நிய ஆண்-பெண் உறவுகளும் சரி கட்டுப்படுத்தப் படாமல் தான்தோன்றித்தனமாக விடப்பட்டால் கண்டிப்பாக சமூகம் பலத்த பாதிப்புகளுக்கு உள்ளாகும் என்பது சாமானியனுக்கும் வெட்டவெளிச்சமான ஒன்று. இருந்தாலும் இதை தங்கள் சுயநலம் காரணமாக மறுக்கும் 'மெத்தப்படித்த மேதாவிகளும்' சமூகத்தில் உள்ளனர் என்பதுதான் கவலைக்குரிய விஷயம்! இவர்கள்தான் சின்னத்திரை, பெரிய திரைகள், பத்திரிகைகள், சமூக வலைத்தளங்கள் மூலமாக தாக்கத்தை ஏற்படுத்தி ஆடைக்கட்டுப்பாடும் பாலியல் கட்டுப்பாடும் தேவையற்ற ஒன்று என்ற மாயையை உருவாக்கி வருகிறார்கள். சமூகமும் அவற்றிற்கு செவிசாய்ப்பதால் இன்னும் பாலியல் கொடுமைகளுக்கு பலியாகி வருகின்றது.

தனி மனிதனுக்கு எவ்வளவு சுதந்திரம் இருக்கிறது? அவன் உரிமை உரிமை என்று எதைக் கோர முடியும்? அதையும் சற்று ஆராய்வோமே!

● முதலில் இவ்வுலகில் அவனுடையது என்று என்ன இருக்கிறது, மற்றும் அவனது அதிகாரத்தின் பலம் எவ்வளவு என்பதை அறிந்த பின்னரே அவனது உரிமை அல்லது சுதந்திரம் பற்றி தீர்மானிக்க முடியும். மனிதன் தனது என்று எதை சொல்லிகொண்டாலும் உண்மையில் அவனது உடல், பொருள், ஆவி அல்லது உயிர் என அனைத்துமே அவனுடைய கட்டுப்பாட்டில் உள்ளவை அல்ல என்பதை அறிவோம். நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் கூறினார்கள்:

''ஆதமின் மகன் (மனிதன்) எனது செல்வம் எனது செல்வம்'' என்று கூறுகின்றான். ஆதமின் மகனே! நீ உண்டு கழித்ததையும் உடுத்திக் கிழித்ததையும் தர்மம் செய்து மிச்சப்படுத்தியதையும் தவிர உனது செல்வத்தில் உனக்குரியது எது?'' (முஸ்லிம் 5665 )

எனது என்று எவற்றைக் கூறுகிறானோ அவை யாவும் இவ்வுலகைப் படைத்தவனால் அவனுக்குத் தற்காலிகமாக வழங்கப்பட்டவையே. அந்த இறைவன் அவன் நாடும்போது இவற்றைக் கொடுக்கவும் பறிக்கவும் செய்கிறான் என்பதுதான் உண்மை. எனவே மனிதர்களுக்கும் அவர்கள் வாழும் இவ்வுலகுக்கும் அதில் உள்ளவற்றுக்கும் உண்மையான சொந்தக்காரன்

எவனோ அவன் மட்டுமே இதைத் தீர்மானிக்க முடியும்.
எனவே மனிதன் தானாக தன் சுதந்திரத்தை தீர்மானிக்க முடியாது என்பது தெளிவாகிறது.

- அடுத்ததாக, இறைவன் மட்டுமே அவனது படைப்பினங்களையும் அவர்களின் தேவைகளையும் பரிபூரணமாகவும் மிகமிக நுணுக்கமாகவும் அறிந்தவன். முக்காலத்தையும் முழுமையாக உணர்ந்தவன். யாருக்கு எவ்வளவு உரிமைகளைக் கொடுக்க வேண்டும் என்பதைத் தீர்மானிக்கும் முழு ஞானம் அவனுக்கு மட்டுமே உள்ளது,
- அடுத்ததாக, இந்தத் தற்காலிக உலகம் என்பது ஒருநாள் அழியும் என்பதும் இதில் ஒவ்வொரு மனிதனும் அவனுக்கு விதிக்கப்பட்ட ஒரு குறுகிய தவணையில் இங்கு வந்து போகிறான் என்பதும் அனைவரும் புரிந்துகொண்ட ஓர் உண்மை. அதாவது இவ்வுலகை ஒரு பரீட்சைக் களமாகப் படைத்துள்ளான் இறைவன். மறுமையில் இறுதித் தீர்ப்புநாள் அன்று அவரவர்க்கு வழங்கப்பட்ட உரிமைகளைப் பற்றியும் அவரவர்க்கு விதிக்கப்பட்ட கடமைகளைப் பற்றியும் அவன் முழுமையாக விசாரிக்கவும் உள்ளான். அவற்றைப் பேணி நடப்போருக்கு வெகுமதியாக சொர்க்க வாழ்வையும் பேணாமல் தான்தோன்றிகளாக நடப்போருக்கு தண்டனையாக நரகத்தையும் அவன் வழங்கவுள்ளான்.

எனவே அந்த இறைவன் தரும் வழிகாட்டுதலின் அடிப்படையில் தனிமனித உரிமைகளைத் தீர்மானிப்பதே அனைவருக்கும் சிறந்தது என்பதை நாம் அறியலாம். அந்த இறைவனின் கட்டளையும் அதுவே. இதோ தனது இறுதி வேதமாம் திருக்குஆனில் அவன் கூறுவதைப் பாருங்கள்:

***4:1.* மனிதர்களே! உங்கள் இறைவனுக்குப் பயந்து நடந்து கொள்ளுங்கள், அவன் உங்கள் யாவரையும் ஒரே ஆத்மாவிலிருந்து படைத்தான், அவரிலிருந்தே அவர் மனைவியையும் படைத்தான். பின்னர் இவ்விருவரிலிருந்து, அநேக ஆண்களையும் பெண்களையும் (வெளிப்படுத்தி உலகில்) பரவச் செய்தான். ஆகவே, அல்லாஹ்வுக்கே பயந்து கொள்ளுங்கள். அவனைக்கொண்டே நீங்கள் ஒருவருக்கொருவர் (தமக்குரிய உரிமைகளைக்) கேட்டுக் கொள்கிறீர்கள். மேலும் (உங்கள்) இரத்தக் கலப்புடைய உறவினர்களையும் (ஆதரியுங்கள்). – நிச்சயமாக அல்லாஹ் உங்கள் மீது கண்காணிப்பவனாகவே இருக்கின்றான்.**

அவ்வாறு மனித உரிமைகளை நியாயமான முறையில் பக்குவமாகப் பங்கிடக்கூடியவன் படைத்த இறைவன் மட்டுமே என்பதை ஏற்றுக் கொள்வதே அறிவுடைமை! அவ்வாறு ஏற்றுக்கொண்டு வாழ்ந்தால் மட்டுமே இவ்வுலகில் அமைதியைக் காண முடியும், மேலும் மறுமையிலும் நாம் அமைதியான வாழ்வை அதாவது சொர்க்கத்தை அனுபவிக்க முடியும். மாறாக தனிமனித சுதந்திரம் என்ற பெயரில் நமது மனோ இச்சைகளைப் பின்பற்றி இறைவன் விதித்த வரம்புகளுக்கு மாறாக நடந்தால் இவ்வுலகின் உரிமையாளன் நிச்சயமாக தண்டிப்பான்.

# வாழ்வே மாயமா?

நாம் இன்று வாழ்ந்துகொண்டிருக்கும் வாழ்க்கை எப்படிப்பட்டது என்பதை இறைவன் இரத்தினச்சுருக்கமாக பின்வரும் திருக்குர்ஆன் வசனங்களில் கூறுவதைப் பாருங்கள்.....

18: 45.மேலும், இவ்வுலக வாழ்க்கைக்கு ஓர் உதாரணம், அவர்களுக்கு (நபியே!) நீர் கூறுவீராக! "அது நாம் வானத்திலிருந்து இறக்கி வைத்த நீரைப் போலிருக்கிறது் பூமியிலுள்ள தாவரங்கள் அதனுடன் கலந்(து செழித்)தன. ஆனால் அவை காய்ந்து, பதராகி அவற்றைக் காற்று அடித்துக் கொண்டு போய் விடுகிறது – மேலும், எல்லாப் பொருளின் மீதும் அல்லாஹ் ஆற்றலுடையவனாக இருக்கின்றான்."

(அல்லாஹ் என்றால் வணக்கத்திற்குத் தகுதிவாய்ந்த ஒரே இறைவன் என்று பொருள்)

ஆம், இந்த வாழ்வின் தற்காலிகமான நிலையற்ற தன்மையைப் புரிந்துகொண்டு அதன்படி மறுமை என்னும் நிலையான நிரந்தர வாழ்விற்கு எது தேவையோ அதை தேடுவதிலும் சேகரிப்பதிலும் முனைவார்கள் அறிவுடையோர். அவை எவையென கற்றுத் தருகிறான் இறைவன்....

18:46. செல்வமும், பிள்ளைகளும் இவ்வுலக வாழ்க்கையின் அலங்காரங்களேயாகும் என்றும் நிலைத்து நிற்கக் கூடிய நற்கருமங்களே உம்முடைய இறைவனிடத்தில் நன்மைப் பலனுடையவையாகவும், (அவனிடத்தில்) நம்பிக்கையுடன் ஆதரவு வைக்கத்தக்கவையாகவும் இருக்கின்றன.

நிலையற்ற இவ்வுலகு எவ்வாறு அழியும் என்பதை திருக்குர்ஆனும் நபிமொழிகளும் நமக்கு பலகோணங்களிலும் படம்பிடித்துக் காட்டுகின்றன..... இதோ இங்கும்.... இன்று பூமிக்கு உறுதிநிலையை கொடுத்துக் கொண்டிருக்கும் மலைகள் அன்று பெயர்த்தெடுக்கப்பட்டு தூள்தூளாக்கப்பட்டு பரத்திவிடப்படுமாம்.....! இது இதை நிகழ்த்தக் கூடியவனின் வாக்குமூலம்.... புறக்கணிக்க முடியுமா?

18:47.(நபியே!) ஒரு நாள் நாம் மலைகளை (அவற்றின் இடங்களை விட்டுப்) பெயர்த்து விடுவோம் அப்போது, பூமியை நீர் வெட்ட வெளியாகக் காண்பீர் அவர்களை ஒன்று சேர்ப்போம், (அந்நாளில்) நாம் ஒருவரையும் விட்டு வைக்க மாட்டோம்.

அனைத்து மனிதர்களும்- இந்த பூமியில் தோன்றிய முதல் மனிதனில் இருந்து இதில் வாழப் போகும் இறுதி மனிதன் வரை- அவர்கள் எந்த நாட்டில் பிறந்து இருந்தாலும் சரி, எந்த மொழியைப் பேசி இருந்தாலும் சரி, எந்த மதத்தில் பிறந்து வாழ்ந்து இறந்து இருந்தாலும் சரி, அவ்வாறு இறந்தவன் ஆணாயினும் பெண்ணாயினும் பாமரன் ஆயினும், படித்தவன் ஆயினும், ஏழை ஆயினும், செல்வந்தன் ஆயினும் சரி, அவர்களின் உடலைப் புதைத்து இருந்தாலும், எரித்து இருந்தாலும், பறவைகளுக்கு உணவாகக் கொடுத்து இருந்தாலும்

கடலிலோ நீரிலோ கரைத்து இருந்தாலும் சரியே..... அவர்கள் அனைவரும் ஒருவர் விடாமல் இறுதி விசாரணைக்காக எழுப்பப் படுவார்கள்!

18:48.அவர்கள் யாவரும் உம்முடைய இறைவனின் சமூகத்தில் வரிசையாகக் கொண்டு வரப்படுவார்கள் ""நாம் உங்களை முதல் தடவை படைத்தவாறே திட்டமாக இப்பொழுதும் நீங்கள் நம்மிடம் வந்து விட்டீர்கள், ஆனால் நாம் உங்களுக்காக வாக்களிக்கப்பட்ட இத்தகைய நாளை ஏற்படுத்த மாட்டோம் என்று நீங்கள் எண்ணிக் கொண்டிருந்தீர்கள்" (என்று சொல்லப்படும்).

எது நடக்காது, நடக்கவே நடக்காது என்ற இறுமாப்பில் இன்று மனிதர்கள் வாழ்ந்து கொண்டு இருக்கிறார்களோ, சத்தியத்தை சொல்லவந்த இறைத்தூதர்களையும் வேதங்களையும் புறக்கணித்து ஏளனம் செய்தார்களோ அவர்கள் அனைவரும் அந்த சம்பவத்தை நேரடியாக ஒளிவுமறைவு இன்றி காண்பார்கள்! சத்தியத்தைப் புறக்கணித்து தான்தோன்றித்தனமாக வாழ்ந்து வந்தவர்கள் குற்றவாளிகளாக அன்றைய நீதிமன்றத்தில் ஆஜர் ஆவார்கள். உலக நீதிமன்றங்களில் இருந்ததைப்போல குற்றவாளிகளுக்கு பரிந்துரைக்க எந்த வழக்கறிஞர்களோ அரசியல் சக்திகளோ குறுக்கு வழிகளோ எதுவும் அங்கு இருக்காது! குற்றவாளிகளை தப்பவைக்க சட்டங்களை வளைத்து ஒடிப்பதற்கும் சாத்தியமில்லை. அவர்கள் தப்பியோட ஏதும் புகலிடங்களும் அங்கு காணமாட்டார்கள். ஆம், அதுதான் நூறு சதவீதம் நீதி நடப்பாகும் நாள்!

18:49.இன்னும் (வினைச்சுவடியாகிய) புத்தகம் (அவர்கள் முன்) வைக்கப்படும் அதிலுள்ளதைக் கண்டு குற்றவாளிகள் மிக்க அச்சத்துடன் இருப்பதைக் காண்பீர் மேலும் அவர்கள், ''எங்கள் கேடே! இந்த ஏட்டிற்கு என்ன (நேர்ந்தது)? சிறியவையோ பெரியவையோ எதையும் வரையறுக்காது இது விட்டுவைக்கவில்லையே!" என்று கூறுவார்கள் இன்னும், அவர்கள் செய்த யாவும் அவர்கள் முன் வைக்கப்படுவதைக் காண்பார்கள் ஆனால் உம்முடைய இறைவன் ஒருவருக்கும் அநியாயம் செய்யமாட்டான்.

ஒவ்வொருவரும் தத்தமது சுயசரிதையை எந்த ஒரு சிதைவும் இன்றி முழுமையாகக் காண்பார்கள். ஒவ்வொருவரும் அவர்களது வாழ்வில் சாதித்த அனைத்தையும் அணுவணுவாக விவரிக்கப்பட்ட பதிவேடாக அது இருக்கும். இங்கு இறைவன் எதை செய் என்று கூறினானோ அவை புண்ணியங்களாகவும் எதைவிட்டும் தடுத்தானோ அவற்றை செய்திருந்தால் அவை பாவங்களாகவும் அங்கு பதிவு செய்யப்பட்டு இருக்கும். யாருக்கும் எந்த அநியாயமும் செய்யப்படமாட்டாது. நல்லோர்க்கு இறைவன் வாக்களித்திருந்த சொர்க்கத்தையும் தீயோர்க்கு புகலிடமான நரகமும் மனிதனுக்கு அன்று வெளிப்படுத்தப்படும். அவரவர் சாதனைகளுக்கு உரியதை அன்று பெற்றுக்கொள்வார்கள்!

# வெட்கம் நல்லதே!

'வெட்கம் என்பது, நல்லதைத்தவிர வேறொன்றைக் கொண்டு வராது' என நபி(ஸல்) கூறினார்கள். (புகாரி, முஸ்லிம்) "வெட்கம் அனைத்தும் நல்லதே" என்று முஸ்லிமின் மற்றொரு அறிவிப்பில் உள்ளது.

# ஆடை வரம்புகளை மீறினால்?

மனிதனின் இயற்கையான உணர்வான வெட்கம் என்பது மனிதர்களுக்கே உரித்தான உயர்ந்த சிறந்த பண்பாகும். வெட்க உணர்வு யாரிடம் காணப்படுகிறதோ அவரால்தான் தீமையில் இருந்தும் பாவமான செயல்களில் இருந்தும் தன்னைத் தற்காத்துக் கொள்ள முடியும். இந்த வெட்க உணர்வை மனித மனங்களில் இருந்து படிப்படியாக களைவது ஷைத்தானின் சூழ்ச்சிகளில் ஒன்று. உடலின் மறைக்க வேண்டிய பகுதிகளை அன்னியரின் பார்வைக்கு விருந்தாக்கும் செயல் அவைகளில் ஒன்று. இதன் மூலம் சமூகத்தில் ஒழுக்க வீழ்ச்சியை உண்டாக்குவது அவனுக்கு எளிதாகிறது.

இந்த ஒழுக்க வீழ்ச்சியைத் தடுக்கவே நம்மைப் படைத்து பரிபாலித்துவரும் இறைவன் தனது தூதர்கள் மூலமாக நாம் பேணவேண்டிய வரம்புகளை கற்றுத் தந்துள்ளான். ஆண்களுக்கு தொப்புள் முதல் முழங்கால் வரையிலான உடலின் பாகங்கள் மறைக்கப்பட வேண்டியவையாகும். பெண்களைப் பொறுத்தவரை முகம் மற்றும் முன்கை தவிர மற்ற எல்லா பகுதிகளையும் மறைத்துக் கொள்ள வேண்டும்.

● ”நபியே! உம்முடைய மனைவியருக்கும், உம்முடைய புதல்விகளுக்கும், விசுவாசிகளின் பெண்களுக்கும், அவர்கள் தங்கள் தலை முந்தானைகளைத் தாழ்த்திக் கொள்ளுமாறு நீர் கூறுவீராக! அதனால் அவர்கள் (சுதந்திரமானவர்கள் என) அறியப்படுவதற்கு இது மிக நெருக்கமானதாகும் அப்போது அவர்கள் (பிறரால்) நோவினை செய்யப்படமாட்டார்கள் இன்னும், அல்லாஹ் மிக்க மன்னிப்பவனாக, மிகக்கிருபையுடையவனாக இருக்கிறான்”.(அல்குர்ஆன் – 33:59)

(அல்லாஹ் என்றால் வணக்கதிற்க்குத் தகுதிவாய்ந்த ஒரே இறைவன் என்று பொருள்)

பெண்ணைப் பொறுத்தவரை அவளது நெருங்கிய உறவினர் அல்லாத மற்ற ஆண்களுக்கு முன்னர் வரும்போது மேற்படி உடலை முழுமையாக மறைத்துக் கொண்டே வரவேண்டும் என்று பணிக்கிறான்.

“மேலும், (நபியே!) விசுவாசிகளான பெண்களுக்கு நீர் கூறுவீராக: ”தங்கள் பார்வைகளை அவர்கள் தாழ்த்திக் கொள்ளவும் தங்கள் மர்மஸ்தானங்களையும் பேணிப் பாதுகாத்துக் கொள்ளவும் அதினின்று வெளியில் தெரியக்கூடியவைகளைக் தவிர, தங்கள் (அலங்காரத்தை) அவர்கள் வெளிப்படுத்தவேண்டாம் தங்கள் முந்தானைகளை தம் மேல்சட்டைகளின்மீது போட்டு (தலை, கழுத்து, நெஞ்சு ஆகியவற்றை மறைத்து)க் கொள்ள வேண்டும் மேலும், அவர்கள் தம் அலங்காரத்தை தம் கணவர்கள் அல்லது தம் தந்தையர், அல்லது தம் கணவரின் தந்தையர், அல்லது தம் குமாரர்கள், அல்லது தம் கணவரின் குமாரர்கள், அல்லது தங்கள் சகோதரர்கள், அல்லது தம் சகோதரர்களின் குமாரர்கள், அல்லது தம் சகோதரிகளின் குமாரர்கள், அல்லது தங்களுடைய பெண்கள், அல்லது தம் வலக்கரம் சொந்தமாக்கிக் கொண்டவர்கள், அல்லது (ஆண்களில் பெண்களின் மீது) விருப்பமற்ற பணியாளர்கள், அல்லது பெண்களின் மறைவான அவயங்களை அறிந்துக் கொள்ளாத சிறு பிராயத்தையுடைய சிறார்கள் ஆகியவர்களைத் தவிர,

(மற்றவருக்கும்) வெளிப்படுத்த வேண்டாம். அன்றியும் தம் அலங்காரத்திலிருந்து தாம் மறைந்திருப்பதை அறியப் படுவதற்காக, தங்களுடைய கால்களை (பூமியில்) அடிக்க வேண்டாம். விசுவாசிகளே! நீங்கள் வெற்றி பெறுவதற்காக இறைவனின் பக்கம் (பாவமன்னிப்பைக் கோரி) தவ்பாச் செய்யுங்கள். (அல்குர்ஆன் 24:31)

# வரம்பு மீறுவோரின் நிலை!

இறைவன் கற்பிக்கும் வரம்புகளைப் பேணாமல் தான்தோன்றித்தனமாக செயல்படுவோர் இவ்வுலகில் இறைகட்டளைகளை அலட்சியம் செய்கிறார்கள். முதற்கண் இது இறைவனுக்கு செய்யும் நன்றிகேடு. இறைவன் தடுத்த உடலின் பாகங்களை அந்நிய ஆண்களுக்கு காட்சிப்பொருளாக வைக்கும் போது பொது இடங்களில் பாலுணர்வைத் தூண்டுகிறார்கள். இதன்மூலம் அந்நிய ஆண்களின் கவனம் ஈர்க்கப் படுவதால் சமூகத்தில் பல சீர்கேடுகள் நிகழ ஏதுவாகின்றன. காதல், கள்ளக்காதல், விபச்சாரம், கற்பழிப்பு, அநியாயமாக அந்நியனின் கற்பம் சுமத்தல், கருக்கொலை, கொலை, குடும்ப அங்கத்தினர் மத்தியில் கலகம் போன்ற பலதும் இதைத் தொடருகின்றன. இதன் விளைவுகள் வினை விதைத்தவர்களை இன்று பாதித்தாலும் பாதிக்காவிட்டாலும் இவை யாவும் இறைவனின் பதிவேட்டில் இருந்து காணாமல் போவதில்லை! இறுதித்தீர்ப்பு நாளன்று இவை யாவும் விசாரணைக்கு சமர்பிக்கப்படும். அன்று அதற்காக நரக வேதனையும் விதிக்கப்படும்.

● வெட்கக்கேடான செயல் நம்பிக்கை கொண்டோரிடம் பரவ வேண்டும் என விரும்புவோருக்கு இவ்வுலகிலும், மறுமையிலும் துன்புறுத்தும் வேதனை உண்டு. அல்லாஹ்வே அறிகிறான். நீங்கள் அறிய மாட்டீர்கள். (அல்குர்ஆன் 24:19)

● நபி (ஸல்) அவர்கள் நவின்றார்கள்: ''உலகில் தன் கணவனுக்கல்லாது மற்றவர்களுக்கு தன்னை அழகுபடுத்தி திரியும் பெண்ணின் நிலை மறுமையின் இருளைப் போன்றதாகும். அங்கு எவ்வித ஒளியும் இருக்கமாட்டாது. (திர்மிதீ)

● நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: இரண்டு சாராரை (இன்னும்) நான் கண்டதில்லை. ஒரு சாரார், அவர்களிடம் மாட்டு வால்களைப் போன்ற சாட்டைகள் இருக்கும். அவற்றைக் கொண்டு மக்களை அடித்துக் கொண்டிருப்பர். இன்னொரு சாரார் பெண்கள் ஆவர். இவர்கள் ஆடை அணிந்தும் நிர்வாணமாக இருப்பார்கள். தளுக்கு நடை போட்டு ஆண்களை வளைத்துப் போடுவார்கள். அவர்களின் தலைகள் ஒட்டகத்தின் திமில்களைப் போன்று (கொண்டை போடப்பட்டு) இருக்கும். எவ்வளவோ தொலைவுக்கு சொர்க்கத்தின் நறுமணம் வீசும். ஆனால் இவர்கள் அதன் வாடையைக் கூட நுகர மாட்டார்கள். அறிவிப்பவர்: அபூஹுரைரா (ரலி),

நூல்: முஸ்லிம் 3971

இந்தக் காட்சிகளைக் கண்டு ரசிக்கின்ற ரசிகர்களுக்கு எச்சரிக்கை:

● கண்களின் (சாடைகள் மூலம் செய்யப்படும்) துரோகத்தையும், உள்ளங்கள் மறைத்திருப்பதையும் அவன் அறிவான். (அல்குர்ஆன் 40:19)

● முடிவில் அவர்கள் அங்கே வந்ததும் அவர்களுக்கு எதிராக அவர்களின் செவியும், பார்வைகளும், தோல்களும் அவர்கள் செய்து கொண்டிருந்தவை பற்றி சாட்சி கூறும் (அல்குர்ஆன் 41:20)

# மதீனாவில் ஓடிய மது ஆறு!

இறைவனையும் மறுமை வாழ்வையும் நம்பிக்கை கொண்டு வாழ்க்கையின் அர்த்தத்தைப் புரிந்து வாழ்ந்து கொண்டிருக்கிற சமுதாயம் இறைவனுக்காக தீமைகளில் இருந்து விலகிவாழ முன்வரவேண்டும்.

பல தீமையான காரியங்களுக்கும் போதைப் பொருளுக்கும் அடிமையாகி அவைகளில் மூழ்கிக் கிடந்தார்கள் நபிகள் நாயகத்தின் காலத்தில் வாழ்ந்து கொண்டிருந்த மக்கள். நபிகளார் போதித்த பகுத்தறிவு பூர்வமான இறைநம்பிக்கையும் மறுமை நம்பிக்கையும் அவர்களை இஸ்லாம் என்ற கொள்கையின்பால் ஈர்த்தது. இது வெறும் ஆன்மீகத்தை மட்டும் போதிக்கும் மதமல்ல, மாறாக வாழ்வையே புரட்டிபோடும் ஒரு சுயசீர்திருத்த வாழ்க்கை நெறி என்பதைப் புரிந்துகொண்டார்கள் அவர்கள். சற்றும் தாமதியாமல் அந்த வாழ்க்கைநெறியை தங்கள் வாழ்வில் நடைமுறைப் படுத்திக் காட்டினார்கள். அந்த உத்தமர்களையே இஸ்லாமிய வரலாறு நபித்தோழர்கள் என்று அழைக்கிறது. அந்த நபித்தோழர்களின் கடந்த கால வரலாற்றைப் புரட்டிப் பார்த்தால் ஒரு கணம் மலைத்து இப்படியும் ஒரு சமுதாயம் வாழ்ந்து வழிகாட்டிச் சென்றுள்ளதா என்று எண்ணத் தோன்றுகிறது. (அவர்களின் பெயருக்குப் பின்னால் ரலி என்று குறிப்பிடுவது ரலியல்லாஹூ அன்ஹூ என்பதன் சுருக்கமாகும். இதன் பொருள் 'இறைவன் அவர்களைப் பொருந்திக் கொள்வானாக!' என்பதாகும்)

உதாரணமாக மதுபானத்தை தடைசெய்யும் இறைவனின் கட்டளைகளைத் தாங்கிய திருக்குர்ஆன் வசனங்கள் நபிகளாருக்கு இறங்கியபோது என்ன நடந்தது பாருங்கள்....

● நம்பிக்கை கொண்டோரே! மது சூதாட்டம், பலிபீடங்கள், (குறி கேட்பதற்கான) அம்புகள், ஆகியவை அருவருப்பானதும், ஷைத்தானின் நடவடிக்கையுமாகும். எனவே இதிலிருந்து விலகிக் கொள்ளுங்கள்! வெற்றி பெறுவீர்கள்! (அல்குர்ஆன் 5 :90)

இவை அனைத்தும் உங்களுக்கு தீமையை ஏற்படுத்தும் என்று இறைவனிடம் இருந்து அறிவிப்பு வந்தபின் அவர்களின் பிரதிபலிப்பு எப்படியிருந்தது? இதோ ஒரு நபித்தோழர் குறிப்பிடுகிறார் கேளுங்கள்:

● நபித்தோழர் அனஸ் (ரலி) அவர்கள் கூறியதாவது:

நான் அபூ தல்ஹா (ரலி) அவர்கள் வீட்டில் மக்களுக்கு மது பரிமாறுபவனாக இருந்தேன்.

அந்த நாட்களில் பேரீச்சம் பழ மதுவை (பேரீச்ச மரக்கள்ளை)யோ அவர்கள் குடித்து வந்தனர். (மதுவைத் தடை செய்யும் இறைவசனம் அருளப்பட்டவுடன்), இறைத்தூதர் (ஸல்) அவர்கள் பொது அறிவிப்புச் செய்பவரை அழைத்து, ''(மக்களே!) மது தடை செய்யப்பட்டு விட்டது'' என்று அறிவிக்கும்படி கட்டளையிட்டார்கள். அபூ தல்ஹா (ரலி) அவர்கள் என்னிடம், ''வெளியே சென்று இதை ஊற்றிவிடு'' என்று கூறி னார்கள். நான் வெளியே சென்று அதை (சாலையில்) ஊற்றி விட்டேன். மதீனா நகரின் தெருக்களில் அது ஓடியது.

மக்களில் சிலர், ''மது தங்கள் வயிறுகளில் இருக்கும் நிலையில் பல பேர் கொல்லப்பட்டிருக்கிறார்களே! (அவர்களின் நிலை என்ன?)'' என்று கேட்டார்கள். அப்போதுதான், ''இறைநம்பிக்கை கொண்டு நற்செயல்கள் புரிகின்றவர்கள் (முன்னர்) எதையும் உண்டவை பற்றி அவர்கள் மீது குற்றமில்லை'' (5:93) என்னும் திருக்குர்ஆன் வசனம் அருளப்பட்டது. (ஆதாரம் : புகாரி 2464)

மதுபானத்தைக் குடிப்பது வாழ்க்கையில் பெருமைமிக்கதாக அந்தச் சமுதாயத்தினர் கருதி வந்தனர். மதுபானத்தை பெரும் பீப்பாய்களில் சேமித்து அவைகளை அருந்தி வந்தார்கள் அப்படியான நிலையில் இறைவனின் வார்த்தைகள் அவர்களின் உள்ளக்கதவை பலமாகத் தட்டிய போது அந்த மதுப் பீப்பாய்கள் மதீனாவின் தெருக்களில் ஆறாய் பெருக்கெடுத்து ஓடின என்று அனஸ் பின் மாலிக் (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்.

இறைவனின் கட்டளை இறங்கிய அடுத்த நொடிப் பொழுதில் இந்த படுபாதகமான செயலை இறைவன் விரும்பவில்லை என்பதை அறிந்து அவனது சட்டத்திற்குக் கட்டுப்பட்டு சரணாகதி அடைந்தார்கள்

# வளரும் இஸ்லாம்

- 1990 இல் இருந்து 2010 வரையில் உலக முஸ்லிம் மக்கள்தொகை வருடத்திற்கு 2.2 சதவீதம் உயர்வு கண்டு வருகிறது.
- 2030 இல் மொத்த உலக 7.9பில்லியன் மக்கள்தொகையில் முஸ்லிம் மக்கள்தொகை 26.4 மூ இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.
- மதமாற்ற விகிதத்தைக் கணக்கிலெடுத்தால் உலகிலேயே அதிவேகமாக வளரும் மதம் இஸ்லாமே என்று கின்னஸ் புக் ஒப் ரெகார்ட்ஸ் கூறுகிறது.
- சவுதி அராபியாவில் அது துவங்கினாலும் 2002 இல் 80மூ முஸ்லிம்களும் அரபியர் அல்லாதவரே.
- 1990-இலிருந்து 2000 க்கு இடைப்பட்ட காலகட்டத்தில் கிருஸ்துவத்தை விட சுமார் 12.5 மில்லியன் மக்கள் இஸ்லாத்துக்கு மாறியுள்ளனர்.

( தகவல்: Guinness of Records Book2003 p 142)

**அமெரிக்காவில்.....**

- 10 ஆண்டுகளில் 67% வளர்ச்சி !! - ''வாஷிங்டன் போஸ்ட்'' விரிவான தகவல்!!!
- அமெரிக்காவின் 20 மாகாணங்களில் இஸ்லாமிய மார்க்கம், இரண்டாவது பெரிய மதமாக உருவெடுத்துள்ளதாக அமெரிக்காவின் அதிகாரப்பூர்வ அமைப்பான, "ASARB" (Association of Statisticians of American Religious Bodies) என்ற ''சென்செஸ்'' வெளியீட்டு நிறுவனம் அறிவித்துள்ளது.
- மனமாற்றத்தின் மூலம் தான் ''மதமாற்றம்'' நிகழ்ந்துள்ளதாக கூறும் மேற்படி ஆய்வில், 20% அமெரிக்கர்கள் இஸ்லாமிய போதனைகள் மற்றும் ஆய்வுகளை முழுமையாக மேற்கொண்ட பிறகு தான் இஸ்லாத்தை எற்றுள்ளதாக கூறுகிறது, ASARB.

# கதவைத் தட்டும் முன் திறந்து வை!

ஆம், அந்த என்ற அழையா விருந்தாளி திடீரென நம்மிடம் வருவான். எப்போது வருவான் என்பதை அவன் சொல்லிக்கொண்டு வருவதில்லை.

வந்தால் அவன் ஒரு கணமும் காத்திருப்பதில்லை. நாம் நம் வீடுகளில் இருந்தாலும் சரி, வீதிகளில் இருந்தாலும் சரி, ஓய்வெடுத்துக்கொண்டு இருந்தாலும் சரி, தொழிலில் அல்லது வியாபாரத்தில் அல்லது படிப்பில் நாம் முனைப்பாக இருந்தாலும் சரி, அவன் நம்மை விடுவதில்லை.

வெடுக்கென்று நம்மை இழுத்துச் சென்று விடுகிறான்.

நாளை நமக்காக பல விஷயங்கள் காத்திருக்கின்றன..... பல கடமைகள், தீர்க்க வேண்டிய கடன், முக்கியமான ஒரு வர்த்தகப் பேச்சுவார்த்தை, ஒரு திருமண விருந்து, மாலை வெளிநாட்டில் இருந்து திரும்பி வரும் மகனை விமான நிலையத்தில் இருந்து அழைத்து வருதல்..... எனப் பற்பல விஷயங்கள்......... இந்த விருந்தாளிக்கு இவையெல்லாம் ஒரு பொருட்டேயல்ல.

அவனுக்கு நமது உறவுகளும் உணர்வுகளும் உடமைகளும் எதுவுமே தென்படுவதில்லை. சட்டென்று வந்து வெட்டொன்று துண்டு இரண்டு என நம்மை இவ்வுலகிலிருந்துப் பிரித்து விடுகிறான்.

யார் அவன்? ........அவன் வேறு யாருமல்ல. ......அவன்தான் நம் உடன்பிறப்பான மரணம்!

அவன் வரும் முன் நாம் முக்கியமாகத் திறந்து வைக்கவேண்டிய ஒன்று உள்ளது..... அதுதான் நம் மனக்கதவு! முன்னோரின் பழக்கவழக்கங்கள், வறட்டு கவுரவம், மூடநம்பிக்கைகள், மனோஇச்சை போன்றவற்றால் பூட்டு போடப்பட்டு அடைந்து கிடக்கும் அந்த மனக்கதவைத் திறந்து வைத்தால்தான் சத்தியம் நமக்குள் நுழையும்.

அந்த மரணம் நம்மைச் சந்தித்த பின் நம் நிலை என்ன?

ஆம்,அதைப்பற்றி தான் நாம் கவலைப் பட வேண்டியவர்களாக உள்ளோம். அவனை சந்திப்பதற்கு நாம் செய்யவேண்டிய முன்னேற்பாடுகள் என்ன? அதை இப்போதே ஆராய வேண்டும் அதன்படி செயல்பட வேண்டும்.



இறைநம்பிக்கை கொணடவர்களே! அல்லாஹ்வுக்கு அஞ்சி நடந்து கொள்ளுங்கள், மேலும், ஒவ்வொருவரும் (மறுமை) நாளுக்காக தான் முற்படுத்தி வைத்திருப்பதைப் பார்த்துக் கொள்ளட்டும், இன்னும், நீங்கள் அல்லாஹ்வை அஞ்சி நடந்து கொள்ளுங்கள், நீங்கள் செய்பவற்றை, நிச்சயமாக அல்லாஹ் நன்கறிந்தவன். (திருக்குர்ஆன் 59:18)

(அல்லாஹ் என்றால் வணக்கத்துக்குரிய ஒரே இறைவன் என்று பொருள்)

# விபச்சாரத்தின் பக்கமே நெருங்காதீர்!

விபச்சாரம் என்பது இன்றுவாழும் சமூகத்தையும் அதன் தலைமுறைகளையும் சீர்கெடுக்கும் கொடிய பாவம். அதில் ஈடுபடுவோருக்கு மறுமையில் கடுமையான தண்டனைகள் காத்திருக்கின்றன. இவ்வுலகில் யாராவது இதைச் செய்து இதன் பாவத்தைக் கழுவிக் களைய விரும்பினால் கசையடி, கல்லெறி தண்டனை போன்றவைகளை எதிர்கொண்டாலே முடியும் என்னும் அளவிற்கு இறைவனின் பார்வையில் இது மிகவும் கொடிய பாவமாகும்.

அந்த விபச்சாரத்தை நீங்கள் நெருங்கிக் கொண்டிருக்கிறீர்களா? இல்லையா? உங்களை நீங்களே பரீட்சித்துப் பார்த்துக் கொள்ளுங்கள்....

- சினிமாப் படங்களில், சின்னத் திரைகளில் யாரோ எவரோ கட்டிப் பிடித்து ஆடுகிற காட்சிகளை நீங்கள் பார்ப்பதுண்டா?
- சினிமா போஸ்டர்கள், பத்திரிகைகளில் வரும் ஆபாச செய்திகள், விளம்பரங்கள் உங்கள் கவனத்தை ஈர்ப்பதுண்டா?
- இரட்டை அர்த்தமுள்ளதும் இல்லாததுமான சினிமா பாடல்கள் உங்கள் காதுக்கு மகிழ்ச்சி அளிப்பதுண்டா?
- உங்கள் வீட்டில் தொலைக்காட்சியில் மேற்கண்டவாறு உள்ள பாடல்களையும் உடல் சேட்டைகளையும் காட்சிகளையும் குடும்ப அங்கத்தினர்களோடு ஒன்றாக அமர்ந்து ரசிக்கின்றீர்களா?

'உண்டு' என்பது உங்கள் பதிலானால்... விபச்சாரம் செய்வதற்குரிய ஒரு படியில் கால்வைத்து விட்டீர்கள் என்றே அர்த்தம். இதற்கு அடுத்த படி, நாமே செய்து பார்த்தால் என்ன தவறு இருக்கிறது? என்று அதற்குரிய முயற்சியில் இறங்கிவிட மனம் முயலும். ஷைத்தான் அதற்கான நியாயங்களையும் கற்பித்து உங்களை கவிழ்த்துவிடவும் வாய்ப்புண்டு!

முதலில், பிறர் செய்வதைப் பார்க்கின்ற போது நமக்கு அருவருப்பாகத் தெரியவில்லை, கூச்சமாக இல்லை என்றால், அதைப் பார்க்கத்தக்கதாக நமது மனம் மாறிவிட்டதெனில், அடுத்ததாக நாமே அதைச் செய்தால் என்ன? என்று நமது எண்ணங்களில் தோன்றிவிடும். நமது செயல்களில் அதற்குரிய வழிகளைத் தேடி முயற்சியில் ஈடுபட வேண்டிய நிலை வந்துவிடும். இப்படித்தான் மனிதனின் மனநிலை படைக்கப்பட்டிருக்கிறது.

இன்னும் இதைக் கூட்டாக குடும்ப அங்கத்தினர்களோடு நீங்கள் பார்க்கும்போது அதற்கு அங்கு அங்கீகாரமும் கொடுத்துக்கொண்டு இருக்கிறீர்கள் என்பதையும் கவனியுங்கள்.

- இறைநம்பிக்கையாளர்களைப் பார்த்து நபிகளார் கூறினார்கள்:

''உங்களில் ஒருவர் வெறுக்கத் தகுந்ததைக் கண்டால் அதை தனது கரத்தால் மாற்றட்டும். அதற்கு சக்தி பெறவில்லையெனில் தனது நாவால் மாற்றட்டும். அதற்கும் சக்தி பெறவில்லையெனில் தனது மனதால் வெறுத்து விடட்டும். இது இறைநம்பிக்கையின் பலவீனமான நிலையாகும்.'' (ஸஹீஹ் முஸ்லிம்)

● விபச்சாரத்திற்கு நெருங்காதீர்கள்! அது வெட்கக் கேடானதாகவும், தீய வழியாகவும் இருக்கிறது. (அல்குர்ஆன்17:32) என்கிறது இறைவனின் வசனம்.

விபச்சாரத்திற்கு நெருங்குதல் என்றால் இதுபோன்ற கேடுகெட்ட காட்சிகளைப் பார்த்துப் பார்த்து ரசிப்பது, குழைந்து குழைந்து பேசுவது, கணவன் மனைவி அல்லாத ஆண் பெண் இருவர் கொஞ்சுவது போன்றவை தான்.

கணவனிடம் மனைவி கொஞ்சுவதற்குப் பெயர் இல்லறம். குடும்பவியல். ஆனால் சம்பந்தமே இல்லாத ஆண் பெண்ணிடமோ, பெண் ஒரு ஆணிடமோ கொஞ்சுவது விபச்சாரத்திற்கு நெருங்குதல் ஆகும். இப்படியே நெருங்கி, நெருங்கி கடைசியில் எதை விபச்சாரம் என்று இறைவன் சொல்கிறானோ, எதை இந்தச் சமூகமும் விபச்சாரம் என ஒத்துக் கொள்கிறதோ அதில் விழுந்துவிடுகிற நிலையைப் பார்க்கிறோம்.

அதனால்தான் விபச்சாரத்தின் பக்கம் கூட நெருங்காதே! அப்படி நெருங்குவது அருவருக்கத்தக்கதும் கெட்ட வழியுமாகும் என்று இறைவன் எச்சரிக்கிறான்.

"வெட்கக் கேடானவைகளில் வெளிப்படையானவற்றையும், இரகசியமானதையும், பாவத்தையும், நியாயமின்றி வரம்பு மீறுவதையும், எது பற்றி அல்லாஹ் எந்த ஆதாரத்தையும் இறக்கவில்லையோ அதை அல்லாஹ்வுக்கு இணையாகக் கருதுவதையும், நீங்கள் அறியாததை அல்லாஹ்வின் மீது இட்டுக் கட்டிக் கூறுவதையுமே என் இறைவன் தடை செய்துள்ளான்" என (முஹம்மதே!) கூறுவீராக! (அல்குர்ஆன் 7:33)

(அல்லாஹ் என்றால் வணக்கத்திற்குரிய ஒரே இறைவன் என்று பொருள்)

இந்த வசனத்தில் சொல்லப்படும் வெளிப்படை என்பது நேரடியாகச் செய்யக் கூடிய விபச்சாரத்தைக் குறிக்கும். அந்தரங்கமானது, இரகசியமானது என்பது நேரடியாகச் செய்வதற்குத் தூண்டக் கூடிய இரகசியப் பேச்சுகள் போன்ற காரண காரியங்களைக் குறிப்பதாகும். சிலர் அந்தரங்கமாக அசிங்கமாகப் பேசிவிட்டு, நாங்கள் எந்தத் தவறும் செய்யவில்லையே என்று வாதிடுகின்றனர். விபச்சாரம் என்ற தவறைச் செய்யவில்லையாயினும் விபச்சாரத்திற்கு நெருங்கி விட்டார்கள்.

● அவர்கள் அல்லாஹ்வுடன் வேறு கடவுள்களைப் பிரார்த்திக்க மாட்டார்கள். அல்லாஹ் தடை செய்துள்ள எந்த உயிரையும் தக்க காரணமின்றி கொல்ல மாட்டார்கள். விபச்சாரம் செய்ய மாட்டார்கள். இதைச் செய்பவன் வேதனையைச் சந்திப்பான். (அல்குர்ஆன் 25:68)

ஒழுக்கக்கேட்டை ஒருவன் செய்தால் அவன் மறுமையில் கடும் தண்டனைக்கு ஆளாகுவான் என அல்லாஹ் இவ்வசனத்தில் கூறுகிறான்.

ஒழுக்கக்கேடான விபச்சாரத்தைச் செய்பவனுக்குரிய தண்டனையை நபிகள் நாயகமும் நமக்கு எச்சரித்துள்ளார்கள். அவரது வாழ்நாளில் அவருக்கு மறுமையில் நரகத்தின் காட்சிகள் காட்டப்பட்டன. அதை இவ்வாறு நமக்கு விளக்குகிறார்கள்:

நேற்றிரவு கனவு கண்டீர்களா? என மக்களிடம் நபிகள் நாயகம் கேட்டார்கள்.

நபித்தோழர்கள் இல்லை என்றார்கள். அப்போது நபியவர்கள், "நான் நேற்று இரவு ஒரு கனவு கண்டேன். அதில் இரண்டு வானவர்கள் வந்து, மறுமையில் என்னவெல்லாம் நடக்கும் என்பதைக் காட்டுவதற்காக என்னை அழைத்துச் சென்றார்கள். தீய செயல்கள் புரிந்தவர்களுக்கு அவர்களுக்குரிய தண்டனையின் பல்வேறு காட்சிகளைப் பார்த்ததை நபித்தோழர்களுக்கு விவரித்தார்கள்.

...அங்கு அடுப்பு போன்ற ஒரு பொந்து இருந்தது. அதன் மேற்பாகம் குறுகலாகவும் அடிப்பாகம் விசாலமானதாகவும் இருந்தது. அதற்குக் கீழ் நெருப்பு எரிந்துகொண்டிருந்தது. நெருப்பின் சூடு அதிகமாகும்போது அந்தப் பொந்தின் அடியில் உள்ளவர்கள் வெளியேற முயன்றார்கள். (ஆனால் மேற்பகுதி குறுகலாயிருப்பதால் வெளியேற முடியவில்லை.) நெருப்பு அணைந்ததும் பழைய (கீழ்ப்) பகுதிக்கு வந்துவிட்டார்கள். அதில் ஆண்களும் பெண்களும் நிர்வாணமாகக் கிடந்தார்கள். நான் "இவர்கள் யார்?" எனக் கேட்டேன்..... "அவர்கள் விபசாரத்தில் ஈடுபட்டவர்கள்" என்று சொல்லப்பட்டது. (ஹதீஸ் சுருக்கம்)

அறிவிப்பவர்: சமுரா பின் ஜுன்துப் (ரலி), நூல்: புகாரி 1386

(இதன் முழுச் செய்தியையும் புகாரி 1386வது எண்ணில் பார்க்கவும். இன்னும் பல்வேறு தீமைகளுக்குரிய தண்டனைகளும் அதில் உள்ளன.)

சட்டியில் தண்ணீர் கொதிக்கும் போது நுரை பொங்குவதைப் போன்று மனிதர்கள் பொங்கி வருவார்கள். பிறகு நெருப்பு அணைக்கப்பட்டதும் மீண்டும் கீழே சென்றுவிடுவார்கள். அதன் பிறகு மீண்டும் நெருப்பு மூட்டப்படும். அப்போதும் பொங்கி வெளியே வழியும் அளவுக்கு மேலே வருவார்கள். மீண்டும் நெருப்பு அணைக்கப்படும். இப்படி வெளியேற முடியாத அளவுக்கு அதில் ஒழுக்கம் கெட்டவர்கள் தனித் தண்டனையை அனுபவிப்பதாக நபிகள் நாயகம் மறுமைக் காட்சியை வர்ணிக்கிறார்கள்.

எனவே மறுமையில் இவ்வளவு கடுமையான தண்டனை கிடைக்கும் என்பதை மனதில் பதிய வைத்துக் கொண்டால் ஆணுக்கும் பெண்ணுக்கும் குடும்ப வாழ்க்கை இனிமையானதாக இருக்கும். சந்தோஷமாகவும் நிம்மதியாகவும் கணவன் மனைவியர்கள் வாழ்வார்கள்.

# நயவஞ்சகம் குடிகொண்ட உள்ளம்!

"நான்கு பண்புகள் எவனிடம் உள்ளனவோ அவன் வடிகட்டிய நயவஞ்சகன் ஆவான். அவற்றில் ஏதேனும் ஒன்று யாரிடமேனும் இருந்தால் அதை விட்டொழிக்கும் வரை நயவஞ்சகத்தின் ஒரு பண்பு அவனிடம் இருந்து கொண்டே இருக்கும். நம்பினால் துரோகம் செய்வான். பேசினால் பொய்யே பேசுவான். ஒப்பந்தம் செய்தால் அதை மீறுவான். விவாதம் புரிந்தால் நேர்மை தவறிப் பேசுவான்" என்று இறைத்தூதர்(ஸல்) அவர்கள் கூறினார்கள்" என அப்துல்லாஹ் இப்னு அம்ர்(ரலி) அறிவித்தார்.

# இஸ்லாத்தை கட்டாயமாக திணிக்கமுடியுமா?

இராக் மற்றும் மற்றும் சிரியா நாட்டைக் கைப்பற்றியுள்ள ISIS என்ற அமைப்பு முஸ்லிம் அல்லாதவர்களை முஸ்லிம்களாக மதம் மாறும்படி வற்புறுத்தி வருவதாகவும் அவ்வாறு மாறாதவர்களை ஈவு இரக்கமின்றி சுட்டுக் கொன்று வருவதாகவும் ஊடகங்களில் செய்திகள் வெளிவந்து கொண்டு இருக்கின்றன என்பதை அறிவோம். இதைக் காணும் பொது மக்களில் பலரும் இஸ்லாமியர்களை வெறுப்புடன் காணும் சூழல் உண்டாகி வருகிறது. இது பற்றிய உண்மைதான் என்ன?

**1. இஸ்லாம் என்பது ஒரு கொள்கை:** இவ்வுலகைப் படைத்து பரிபாலித்து வரும் இறைவனுக்கு கீழ்படிந்து வாழ்தலே இஸ்லாம் என்ற அரபுமொழி சொல்லால் அறியப்படுகிறது. இனம், நாடு, மொழி, நிறம் இவற்றின் வரம்புகளைக் கடந்து இதை யார் வேண்டுமானாலும் ஏற்றுக்கொள்ளலாம். அதன் படி தன்னை சீர்திருத்திக் கொண்டு வாழலாம். அவ்வாறு மனிதன் தன்னை இறைவனின் கட்டளைகளுக்கு கட்டுப்படுத்திக் கொண்டு வாழ்ந்தால் இவ்வுலகிலும் அமைதி காணமுடியும் என்பதும் மறுமையில் அதற்குப் பரிசாக சொர்க்கம் என்ற நிரந்தர வாழ்விடம் கிடைக்கும் என்பதும் இஸ்லாம் முன்வைக்கும் தத்துவமாகும். நம்பிக்கை சார்ந்த விடயம் என்பதால் எப்படி நாத்திகத்தையோ அல்லது ஆத்திகத்தையோ யார்மீதும் திணிக்க முடியாதோ அதேபோல இஸ்லாத்தையும் யார்மீதும் திணிக்க முடியாது.

**2. முஸ்லிம் என்பது பண்பை ஒட்டிய பெயர்- பிறப்பினால் வருவது அல்ல!**

யார் அவ்வாறு இறை கட்டளைகளுக்கு தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டு வாழ்கிறாரோ அவரே 'முஸ்லிம்' (பொருள்- கட்டுப்பட்டவர்) என்று அறியப்படுகிறார். அவ்வாறு கட்டுப்பட்டு வாழும் வரைதான் அவர் முஸ்லிமாக இருப்பார். எப்போது அதை விட்டுவிட்டாரோ அப்போதே இஸ்லாமிய வட்டத்தில் இருந்து வெளியேறியும் விடுகிறார். எனவே ஒருவர் சுயவிருப்பத்தின் அடிப்படையில் மட்டுமே முஸ்லிமாக முடியும். யாரும் யாரையும் நிர்பந்தித்து முஸ்லிமாக்க முடியாது என்பது தெளிவு.

**3. சடங்குகள் இல்லை:** ஒருவர் இஸ்லாம் மார்க்கத்தை ஏற்றுக்கொள்ள விரும்பினால் இறைவனிடம் ஒரு உறுதிமொழியை எடுத்துக் கொண்டால் போதுமானது. அதாவது 'வணக்கத்துக்குரியவன் இறைவனைத் தவிர யாரும் இல்லை என்றும் முஹம்மது நபி அவர்கள் இறைவனின் தூதர் ஆவார் என்றும் ஒப்புக்கொள்கிறேன், அதற்கு சாட்சியம் கூறுகிறேன்" என்று மனதார ஏற்று வாய்மொழியாகக் கூறுவதே அந்த உறுதிமொழி. அதற்கு எந்த சடங்குகளும் கிடையாது. யார் முன்னிலையிலோ அல்லது பள்ளிவாசலிலோ இதை கூறவேண்டும் என்பதும் கிடையாது. இஸ்லாத்தை ஏற்பது என்பது ஏற்பவருக்கும் இறைவனுக்கும் மத்தியிலான ஒரு உடன்படிக்கை. அதை

எழுத்துமூலமாக்க வேண்டும் என்பதோ ஏதாவது நீதிமன்றத்திலோ அலுவலகத்திலோ தாக்கல் செய்யவேண்டும் என்பதோ கிடையாது.

**4. இஸ்லாத்தில் கட்டாயம் என்பதும் கிடையாது:** இஸ்லாத்தின் அடிப்படையான திருக்குர்ஆனில் யார் மீதும் மார்க்கத்தை திணிக்கக் கூடாது என்ற கட்டளை தெளிவாக உள்ளது.

● இம்மார்க்கத்தில் எந்த வற்புறுத்தலும் இல்லை. வழி கேட்டிலிருந்து நேர்வழி தெளிவாகி விட்டது. தீய சக்திகளை மறுத்து அல்லாஹ்வை நம்புபவர் அறுந்து போகாத பலமான கயிற்றைப் பிடித்துக் கொண்டார். அல்லாஹ் செவியுறுபவன் அறிந்தவன். (அல்குர்ஆன் 2 : 256)

(அல்லாஹ் என்றால் வணக்கத்திற்குத் தகுதிவாய்ந்த ஒரே இறைவன் என்று பொருள்)

● "இவ்வுண்மை உங்கள் இறைவனிடமிருந்து உள்ளது" என்று (முஹம்மதே) கூறுவீராக! விரும்பியவர் நம்பட்டும்! விரும்பியவர் மறுக்கட்டும். அநீதி இழைத்தோருக்கு நரகத்தை நாம் தயாரித்துள்ளோம். அதன் சுவர்கள் அவர்களைச் சுற்றி வளைத்துக் கொள்ளும். அவர்கள் தண்ணீர் கேட்டால் முகத்தைப் பொசுக்கும் உருக்கிய செம்பு போன்ற கொதி நீர் வழங்கப்படும். அது கெட்ட பானம். கெட்ட தங்குமிடம். (அல்குர்ஆன் 18 : 29)

● (முஹம்மதே!) உமது இறைவன் நாடியிருந்தால் பூமியில் உள்ள அனைவரும் ஒட்டு மொத்தமாக நம்பிக்கை கொண்டிருப்பார்கள். நம்பிக்கை கொண்டவர்களாக ஆவதற்காக மக்களை நீர் நிர்பந்திப்பீரா? (அல்குர்ஆன் 10 : 99)

● எனவே அறிவுரை கூறுவீராக! (முஹம்மதே!) நீர் அறிவுரை கூறுபவரே. அவர்களுக்கு நீர் பொறுப்பாளி அல்லர். புறக்கணித்து (ஏக இறைவனை) மறுப்பவன் தவிர. அவனை மிகக் கடுமையாக அல்லாஹ் தண்டிப்பான். அவர்களுடைய மீளுதல் நம்மிடமே உள்ளது. பின்னர் அவர்களை விசாரிப்பது நம்மைச் சேர்ந்தது.
அல்குர்ஆன் (88 : 21)

ஒருவேளை இங்கு இறைவனின் வசனங்கள் இஸ்லாத்தை ஏற்காதவர்களுக்கு மறுமையில் நேரகூடிய பாதிப்புகளைப் பற்றி எச்சரிப்பதால் இதுவும் ஒரு கட்டாயப் படுத்துதல் அல்லவா? என்ற கேள்வி உங்களுக்குள் எழலாம். இதற்குரிய விளக்கம் இதோ....

ஒரு நகரத்தில் போக்குவரத்தை ஒழுங்கு செய்வதற்காக அங்கு காவல் துறையினர் சில சட்டங்களை விதிக்கிறார்கள் என்று வைத்துக் கொள்வோம். உதாரணமாக வாகனங்கள் சாலையின் இடதுபுறமாகச் செல்லவேண்டும் என்பது, சிவப்பு விளக்கு எரியும்போது நிற்றல், பச்சைவிளக்கு எரியும்போது செல்ல அனுமதி போன்றவற்றை கூறலாம். அதேவேளையில் அவற்றை மீறுவோருக்கு தக்க தண்டனைகளையும் அபராதங்களையும் அவர்களே குறிப்பிடுவார்கள். அவை போன்றதே இறைவனின் வசனங்களும்! இவ்வுலகுக்கு சொந்தக்காரன் அவன். இம்மையும் மறுமையும் அவனுக்கே சொந்தம். அந்தவகையில் தான் விதித்த சட்டங்களையும் பரிந்துரைக்கும் வாழ்க்கை நெறியையும் ஏற்காதவர்கள் சந்திக்க இருக்கும் விளைவுகளை நமக்கு முன்கூட்டியே எச்சரிக்கிறான் என்பதைப் புரிந்து கொண்டால் இந்த சந்தேகம் விலகும்.

# ஏனிந்த எதிர்ப்பலைகள்?

இஸ்லாம் என்ற இந்த சுயசீர்த்திருத்தக் கொள்கையை யாரும் யார் மீதும் திணிக்க முடியாது என்பதை அதன் இயல்பில் இருந்தே புரிந்து கொள்ளலாம். எந்த ஒரு திணிப்புக்கோ ஆசைவார்த்தை அல்லது சலுகை பிரயோகத்துக்கோ அவசியமில்லாத வகையில் இம்மார்க்கம் உலகில் அதிவேகமாகப் பரவி வருகிறது. கடுமையான எதிர்ப்புகளுக்கு மத்தியிலும் இதை ஏற்றுக்கொண்டவர்கள் எதிரிகளின் சித்திரவதைகளுக்கு ஆளானாலும் சற்றும் தொய்வில்லாமல் தொடர்கிறது இறைவனின் மார்க்கத்தின் வெற்றிப்பயணம்!

அது கற்பிக்கும் தெளிவான பகுத்தறிவு பூர்வமான கடவுள் கொள்கையும் மறுமை நம்பிக்கையும் மனித சமத்துவமும் வாழ்வியலும் மக்களை அதிகமதிகம் ஈர்த்து வருகிறது. சமூக நீதி மறுக்கப்பட்டவர்களும், அடக்குமுறைகளுக்கு ஆளானவர்களும், நலிந்தவர்களும் தங்கள் துன்பங்களில் இருந்து தீர்வுகாண இஸ்லாத்தில் இணைகிறார்கள். படித்தவர்களும் பாமரர்களும் ஆண்களும் பெண்களும் கறுப்பர்களும் வெள்ளையர்களும் என அனைத்து தரப்பினருக்கும் அனைத்து மொழியினருக்கும், நாட்டினருக்கும் ஒரேபோல வாழ்வியல் தீர்வுகள் இஸ்லாம் கூறுவதால் இதில் இணைவோரின் எண்ணிக்கை என்றும் ஏறுமுகமாகவே இருக்கிறது. இது குறித்து இறைவன் கூறும் வாக்குறுதி பொய்யாக வாய்ப்பில்லையல்லவா?


“தம் வாய்களைக் கொண்டே இறைவனின் ஒளியை (ஊதி) அணைத்துவிட அவர்கள் விரும்புகின்றார்கள் – ஆனால் இறைமறுப்பாளர்கள் வெறுத்த போதிலும் இறைவனின் தன் ஒளியை பூர்த்தியாக்கி வைக்காமல் இருக்க மாட்டான்.“ (அல் – குர்ஆன் 9:32)

## தவறான சித்தரிப்பின் பின்னணி

ஆனால் இன்று ஊடகங்களில் ஊதிப் பெரிதாக்கிக் காண்பிக்கப்படும் செய்திகளுக்கு பின்னணி என்ன? இஸ்லாத்தை பற்றிய இந்த மட்டகரமான சித்தரிப்புக்குக் காரணம் என்ன?

இதைப் புரிந்து கொள்ள கீழ்கண்ட உண்மைகளை நாம் நினைவு கூர்ந்தாக வேண்டும்:

1. ரவுடிகள் தன் கையாட்களை வைத்துக் கொண்டு தங்கள் ஆதிக்கத்துக்கு உட்பட்ட ஊரை எப்படி தனது கட்டுப்பாட்டில் வைத்து கொள்ளைகளை நடத்தி வருகிறார்களோ அதே விதமாக முன்னாள் காலனி ஆதிக்க சக்திகள்



ஆங்காங்கே தங்கள் கைப்பாவை அரசுகளையும் கையாட்களையும் அமர்த்தி உலகின் நலிந்த நாடுகளைக் கொள்ளை அடித்து வருகிறார்கள்.
2. அந்நாட்டு இயற்கை வளங்களையும் எண்ணெய் வளங்களையும் தங்கள் இராணுவ பலத்தால் கையகப்படுத்தியது மட்டுமல்ல, ஆங்காங்கே தங்கள் கம்பெனிகளை நிறுவி அந்தந்த நாட்டுமக்களின் உழைப்பின் கனிகளையும் கறந்து வருகிறார்கள் அவர்கள். முக்கியமான நுகர்வுப்பொருட்களின் (உதாரணமாக தேநீர், பற்பசை, சோப்பு, மருந்துகள்) விநியோகம் இவர்களின் பணமுதலைகளின் ஆதிக்கத்தில் இருப்பதைக் காணலாம்.
3. உலக அளவில் பார்க்கும்போது அமெரிக்காவுக்கும் G-8 நாடுகளுக்கும் ஆயுத விற்பனைதான் முக்கியமான வருமானம் ஈட்டும் வியாபாரம். உலகிலேயே அதிநவீன இராணுவத் தளவாடங்கள் இவர்களின் கைவசம் இருப்பதால்தான் உலகநாடுகள் அனைத்தையும் இவர்களால் அச்சுறுத்தி தங்களின் அடிமைகளாக அடக்கிவைக்க முடிகிறது. (உதாரணமாக மத்திய கிழக்கில் எண்ணைவள நாடுகளான சௌதி அராபியா, குவைத், துபாய், கத்தர், போன்ற நாடுகள் இவர்களால் நியமிக்கப்பட்ட கைப்பாவை அரசர்களால் ஆளப்படுகின்றன)
4. ஆயுதங்களை உலக சந்தையில் விற்பனை செய்ய வேண்டும் என்பதற்காக சிறு சிறு நாடுகளுக்கு இடையே பகைமையை மூட்டி ஒருவர்க்கொருவர் அடித்துக் கொள்ள வைப்பார்கள். அல்லது நாடுகளுக்குள்ளேயே சிறுசிறு குழுக்களைத் தூண்டி அரசுகளுக்கு எதிராக கிளர்ச்சி செய்யத் தூண்டுவார்கள். ஆயிரக் கணக்கில் அல்லது இலட்சக்கணக்கில் மனித உயிர்கள் மாய்வது இவர்களுக்கு ஒரு பொருட்டல்ல. தங்கள் வருமானமும் ஆதிக்கமும் தடைபெறக் கூடாது. இது ஒன்றுதான் இவர்களின் இலட்சியம்.
5. தங்கள் ஆதிக்கத்தை தக்கவைக்க ஒருபுறம் இராணுவ அடக்குமுறைகளையும் மறுபுறம் தங்கள் கைவசம் உள்ள பத்திரிகை, டிவி, ரேடியோ போன்ற ஊடகங்களையும் தந்திரமான முறையில் கையாள்கிறார்கள். இவர்களின் கைப்பாவை அரசுகளுக்கு எதிராக மனித உரிமைகள் கோரி புரட்சி செய்பவர்கள் உலகுக்கு முன் தீவிரவாதிகளாகவும் பயங்கரவாதிகளாகவும் சித்தரிக்கப்படுகிறார்கள்.
6. இவர்கள் தங்கள் ஆதிக்கத்திற்குள் கொண்டுவர நினைக்கும் நாடுகளுக்குள் கிளர்ச்சியாளர்களை உருவாக்கி அவர்களை உலகுக்கு முன் புரட்சியாளர்களாகவும் விடுதலைப் போராளிகளாகவும் சித்தரிக்கிறார்கள். அப்படிப்பட்ட நாடுகளில் கிளர்ச்சியாளர்களுக்கு இராணுவ பலமளித்து அந்நாடுகளைக் கைப்பற்றி கிளர்ச்சியாளர்களின் தலைவரை தங்கள் கைப்பாவை அரசராக அல்லது அதிபராக நியமிப்பார்கள். (சமீபத்திய உதாரணங்கள் : ஈராக், ஆப்கானிஸ்தான்)
7. அதிநவீன இராணுவத் தளவாடங்களே இவர்களது முக்கிய விற்பனைப் பொருள். அவற்றை உலக நாடுகளில் விற்க வேண்டுமானால் அவ்வாயுதங்களின் செயல்திறனை உலகுக்கு முன் காட்டியாக வேண்டும்.

அதற்காக சிறு நாடுகளுக்கிடையே இவர்கள் மூட்டிவிடும் போர்களுக்குப் புறம்பாக ஒவ்வொரு ஐந்து வருடங்களுக்கு இடையே குறைந்தபட்சம் ஒருமுறை பெரிய அளவிலான போரை எப்படியாவது நிகழ்த்துகிறார்கள். உலகெங்கும் ஊடகங்கள் மூலமாக மக்களை மூளைச்சலவை செய்து அதை நியாயப் படுத்தவும் செய்வார்கள். மக்கள் அதைப் பார்க்கிறார்கள். இப்படி அப்பாவி மக்களின் இரத்தத்தை ஆறாக ஓட்டி அதன்மீது ஆயுதக் கண்காட்சி நடத்துவது இவர்களது வாடிக்கை! இக்கண்காட்சியை தவறாது நடத்துவதன் மூலம் இவர்களுக்கு இரண்டு நேட்டங்கள்: ஒன்று ஆயுத விற்பனை. மற்றது உலக நாடுகளை பயமுறுத்தி தங்கள் ஆதிக்கத்தை நிலைநிறுத்துவது.

● இஸ்லாத்திற்கு ஏன் இவர்கள் எதிரியாகிறார்கள்? ஏன் இவர்கள் இஸ்லாத்தை தவறான ஒளியில் சித்தரிக்கிறார்கள்?

இன்று உலகெங்கும் இஸ்லாம் அதிவேகமாகப் பரவிவருவது இவர்களின் சுயநல திட்டங்களுக்கு தடைகளை உண்டாக்கி வருகின்றது. இஸ்லாம் நீதியும் தர்மமும் பரவுவதை ஊக்குவிக்கும் அதேவேளையில் அதர்மத்துக்கு எதிராக மக்களை விழிப்புணர்வு கொள்ளச் செய்கிறது. அவ்வாறு விழிப்புணர்வு பெற்ற மக்கள் இவர்களின் கையாட்களுக்கும் கைப்பாவை அரசர்களுக்கும் எதிராக திரும்புவது இந்த சுயநல சக்திகளின் உறக்கத்தைக் கெடுத்துவருகிறது.

மட்டுமல்ல இவர்களின் சொந்த நாடுகளிலும் (அமெரிக்கா, கானடா இங்கிலாந்து, ஃபிரான்ஸ், ஸ்பெயின் போன்றவை) இஸ்லாத்தின் வளர்ச்சி வேகமாக இருப்பதால் அதைத் தடுக்கவும் இவர்கள் பாடுபடவேண்டியுள்ளது. அதற்காக ஊடகங்கள் மூலமும் சமூக வலைத்தளங்கள் மூலமும் இஸ்லாத்தையும் இஸ்லாமியர்களையும் எப்படியெல்லாம் தவறாக சித்தரிக்க முடியுமோ அவ்வாறெல்லாம் சித்தரிக்கிறார்கள்.

இன்று ஈராக் மற்றும் சிரியாவில் நடத்தப்படும் கொடூரங்களும் இஸ்லாத்தை உலகுக்கு முன் தவறாக சித்தரிப்பதற்காக இவர்களின் கைப்பாவை அமைப்புகளின் மூலம் நடத்தப்படுபவையாகவே தென்படுகின்றன. ஏனெனில் இஸ்லாம் எப்போதுமே இத்தகைய நடவடிக்கைகளுக்கு எதிரானது என்பதை சிந்திப்போர் அறிவார்கள்.

அண்மையில் வெளியான கார்டூன் ஐஎஸ்ஐஎஸ் அவர்களின் இஸ்லாத்துக்கு எதிரான அவர்களின் நடவடிக்கையை சித்தரிக்கிறது.


# பொய் சத்தியம் அழிவுக்கே!

இறைத்தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

● யார் பொய்ச் சத்தியத்தின் மூலம் ஒரு முஸ்லிமின் செல்வத்தைப் பறித்துக்கொள்கிறாரோ அதில் இறைவன் அபிவிருத்தி செய்ய மாட்டான். நூல்: அஹ்மது (1553)

● (பொய்) சத்தியம் செய்வது சரக்கை (சுலபமாக) விற்பனை செய்ய உதவும்: ஆனால், பரக்கத் (எனும் அருள்வளத்)தை அழித்துவிடும்.! அறிவிப்பாளர்: அபூ ஹுரைரா (ரலி) புகாரி (2087)

# மனிதமூளை என்ற பேரற்புதம்!




நாம் ஒவ்வொருவரும் அன்றாடம் பல இயந்திரங்களோடும் கணினிகளோடும் புழங்கும் காலம் இது. இவற்றில் ஏதாவது பழுதடைந்துவிட்டால் வாழ்க்கையே ஸ்தம்பித்து விடுகிறது. இவற்றைவிட ஒப்பிடமுடியாத அளவுக்கு நுட்பம் வாய்ந்த மூளை என்ற கணினியையும் உடல் என்ற பிரம்மாண்டமான இயந்திரத்தையும் இலவசமாகப் பெற்றதன் விளைவாக அதன் அருமையை அறியாமல் இருக்கிறோம். இவற்றை சமநிலை தவறாது இயக்கி வரும் இறைவனுக்கு நன்றியுள்ளவர்களாக நாம் இருக்கவேண்டாமா?

● நாம் ஒவ்வொரு பொருளையும் நிச்சயமாக (குறிப்பான) அளவின் படியே படைத்திருக்கிறோம் (திருக்குர்ஆன் 54:49)

● வானங்களையும், பூமியையும் அவன் சத்தியத்துடன் (தக்க முறையில்) படைத்துள்ளான், அன்றியும் உங்களை உருவாக்கி, உங்கள் உருவங்களையும் அழகாக்கினான் அவனிடம் தாம் (யாவருக்கும்) மீளுதல் இருக்கிறது. (திருக்குர்ஆன் 64:3)

## மனித மூளையும் அதன் செயல்திறனும்..!

1. மூளையில் 100,000,000,000 (100 பில்லியன்) நியூரான் செல்கள் உள்ளன. நரம்பு மண்டலத்தில் உள்ள நியூரான்கள் உடலின் உணரும் செய்தியை மூளைக்கு கெமிக்கல் சிக்னல் மூலம் கொண்டு செல்லும். மது (அல்கஹால்) நியூரானின் இணைப்பைத்தான் வலுவிழக்க செய்யும்.

2. நாம் சுவாசம் மூலம் பெறும் ஆக்சிஜனில் 20 சதவிதம் மூளை மட்டுமே பயன்படுத்தும். மீதிதான் மாற்ற உறுப்புகள் பயன்படுத்தும். அதாவது நமது உடலில் 2 சதவீதமே உள்ள மூளை 20 சதவீதம் ஆக்சிஜனை பயன்படுத்துகிறது. 5 முதல் 10 நிமிடங்கள் ஆக்சிஜன் இல்லையெனில் மூளை செல்கள் இறக்க துவங்கிவிடும்.

3. நாம் 11 வயதை அடையும் போதுதான் நம் மூளை முழுவளர்ச்சி அடைகிறது. இருந்த போதிலும் நாம் இருபது வயதை அடையும் போதுதான் முழுமையாக சிந்திக்க உதவுகிறது. நாம் 35 வயதை தாண்டும் போது ஒரு நாளைக்கு நம் மூளையில் உள்ள 7000 மூளை செல்கள் அழிந்து விடுகின்றன. மீண்டும் அந்த செல்கள் உருவாவதில்லை.

4. நம்மை நாமே கிச்சு மூச்சு மூட்ட முடியாது. நம் மூளையின் ஒரு பகுதியான செரிபெல்லம் மூளையின் மாற்ற பகுதிக்கு எச்சரிக்கை செய்யும் நாமே நம்மை கிச்சு மூச்சு ஊட்டுவதாக. அதனால் மூளையின் மாற்ற பகுதிகள் கிச்சு மூச்சு மூட்டுவதை கண்டுகொள்ளாது.

5. மூளை 80 சதவீதம் நீரால் (water) ஆனது.
6. மூளை பகல் நேரத்தை விட இரவு நேரத்தில் அதிக சுறுசுறுப்பாகவும், சிந்தனை செய்யும் திறன் அதிகமாகவும் இருக்கும்.
7. அதிக stress மூளையின் நியாபக திறனையும் கற்றுகொள்ளும் திறனையும் குறைத்து விடும்
8. நம் உடலில் உள்ள மொத்த இரத்தத்தில் 20 சதவீதம் மூளைக்கு மட்டுமே தேவையானதாகும்.
9. மூளைக்கு மூளையின் வலியை உணரமுடியாது. மூளையின் வலியை உணர மூளைக்கு அந்த இணைப்பே கிடையாது. எனவே தான் மூளை அறுவை சிகிட்சை செய்யும் போது நோயாளி முழித்து கொண்டே இருப்பார்கள்.
10. மூளை மிகவும் மெதுவானதாகும் (soft). பட்டர் வெட்டும் கத்தியை கொண்டே மூளையை வெட்டலாம்.
11. மூளையில் இருந்து வரும் செய்திகள் நியூரான்களுக்கு இடையே செல்லும் வேகம் ஒரு வினாடியில் ஆயிரத்தில் ஒரு பங்கு.
12. ஒவ்வெரு முறையும் நாம் நியாபக படுத்த நினைக்கும் செய்திகள் அல்லது சிந்தனை செய்யும் நிகழ்வுகளை 2 அல்லது
அதற்கு மேற்பட்ட மூளை செல்கள் ஒன்றிணைந்து சேமித்து கொள்ளும்.
13. நாம் விழித்துகொண்டிக்கும் பொழுது நமது மூளை உருவாகும் மின்சாரத்தின் அளவு 25 வாட்ஸ், இதன் மூலம் ஒரு பல்ப்பை எரியவைக்கமுடியும்.
14. ரோலர் கோஸ்டர்ஸில் விளையாடும் போது மூளையில் இரத்தம் கட்டிக்கொள்ள (Blood clot) வாய்ப்புகள் அதிகம்.

● 56:57 – 59 .நாமே உங்களைப் படைத்தோம். எனவே, (நாம் கூறுவதை) நீங்கள் உண்மையென்று நம்ப வேண்டாமா? (கர்ப்பப் பையில்) நீங்கள் செலுத்தும் இந்திரியத்தைக் கவனித்தீர்களா? அதை நீங்கள் படைக்கிறீர்களா? அல்லது நாம் படைக்கின்றோமா?

# இறைவனின் கோபத்துக்கு ஆளாகும் மூவர்

“மூன்று (வகையான) நபர்களிடம் இறைவன் மறுமையில் பேசவும் மாட்டான், அவர்களைப் பார்க்கவும் மாட்டான், அவர்களைப் பரிசுத்தப்படுத்தவும் மாட்டான் இன்னும் அவர்களுக்கு கடுமையான வேதனையும் இருக்கின்றது ” என்ற இறைவசனத்தை நபியவர்கள் மூன்று முறை ஓதினார்கள். அப்போது அபூதர் (ரலி) “அவர்கள் தோல்வியடைந்துவிட்டார்கள், நஷ்டமடைந்து விட்டார்கள்” என்று கூறிவிட்டு ”இறைத்தூதரே அவர்கள் யார்?” என்று கேட்டார்கள். அதற்கு நபியவர்கள்,

1. தன்னுடைய கணுக்காலுக்கு கீழ் ஆடையை இழுத்துக் கொண்டு செல்பவன்
2. செய்த உதவியை சொல்லிக் காட்டக் கூடியவன்
3. பொய்சத்தியம் செய்து தன்னுடைய பொருளை விற்கக்கூடியவன் என்று கூறினார்கள். அறிவிப்பவர் : இப்னு உமர் (ரலி) நூல் : முஸ்லிம் (154)

# வாசகர் எண்ணம்

● திருமணச் சிறப்பிதழ் - வாழ்விற்கான கையடக்கக் களஞ்சியமாக திகழ்ந்தது. வாழ்வியல் அகராதி என்றும் குறிப்பிடலாம். இல்லச் சூழல்களில் எப்படிப்பட்ட நெருக்கடியிலும் இவ்விதழ் கையிலிருந்தால் மனம் நன்னெறி விட்டு விலகாமல் காக்கின்ற பன்முறை விளக்கங்களையும் தரும் என்பது உண்மை. நல்ல துணையா? தீய துணையா? தலைமுறைகளைப் பண்படுத்தும் தூய சிந்தனைகளுக்கு வழிநடத்தும் கட்டுரை. அரிய தொண்டாற்றுகிறீர்கள்- நன்றிகள் பற்பல.

**- தஞ்சை என்.ஜே கந்தமாறன், சென்னை 99**

● இறைவணக்கத்தோடு மனிதன் எப்படிவாழவேண்டும் எப்படியெல்லாம் வாழக்கூடாது எனும் விபரங்களை மனிதன் கடைப்பிடிக்கத்தக்க வகையில் தெளிவாக எளிமையாக விவரித்து தந்துள்ள மார்க்கம் இஸ்லாம் மட்டுமே.

**- வி.எம்.என், தும்கூர் (sms மூலம்)**

● செப்டம்பர் இதழ் ஒவ்வொருவரும் படிக்கவேண்டிய ஒன்று. ஒவ்வொருவரும் கடைப்பிடிக்க வேண்டிய சட்டதிட்டங்களையும் கடமைகளையும் அருமையாகக் கூறுகிறது.

**- முருகப்பன், கீழ்பக்கம், சென்னை (sms மூலம்)**

● நற்செய்திமலர் அருமையான தகவல்களைக் கொண்டுள்ள புத்தகம். வாழ்த்துக்கள். வாசிக்க ஆவலாக உள்ளோம்

**- கே.என் அலாவுதீன், திருப்பூர்**

**- சீமை சுரேஷ், காளையார் கோவில், சிவங்கை**

**- எஸ். காமராஜ், திருவண்ணாமலை**

**- பரிமேலழகன், மயில்பட்டி, வேலூர்**

● செப்டெம்பர் இதழ் பற்றி... இஸ்லாம் சிசுக்கொலை, வரதட்சணை இவற்றை ஒழிப்பதும் பெண்ணுக்கு மணக்கொடை வாங்கித்தருவதும் அற்புதமானவை. இது படைத்த இறைவன் அல்லாஹ் மனிதகுலத்துக்கு கற்றுத்தரும் மாபெரும் சமூகப் புரட்சி. இறைவன் உங்களுக்கு அருள்வானாக, உங்கள் மலர் என்றென்றும் வாழ வாழ்த்துகிறேன்.

**- ஏசி. பிரபாகரன், அல்சூர், பெங்களூார், (sms மூலம்)**

● நபி(ஸல்) அவர்களையே கூட அழையாது செல்வந்த நபித்தோழர் திருமணம் முடித்துக்கொண்டார் என்ற வரலாற்று செய்தியினை நாமும் வழிகாட்டுதல் நெறியாக எடுத்துக்கொண்டு ஆடம்பரத் திருமணங்களை தவிர்க்கலாமே.

**- மு. தாஜுதீன், தஞ்சாவூர்.**

● வீடு நல்லாயிருந்தால் வீதி நல்லாயிருக்கும் என்ற விஷயத்தை குடும்ப அமைப்பு குடும்ப அமைதி, ஒற்றுமை,உறவுகள், ஒவ்வொருவரின் பொறுப்புகள் அனைத்தையும் அழகாக வழங்கியுள்ளீர்கள். சகோதர சமூக மக்களும் பாராட்டிப் பேசிக்கொண்டிருக்கிறார்கள். தங்கள் பணிசிறக்க அல்லாஹ் அருள்வானாக. **- எம். ஷேக் தாவூது, ஈரோடு**

## திருக்குர்ஆன் நற்செய்தி மலர்

**வாசகர்கள் கவனத்திற்கு...**

- இவ்விதழைப் பெறவிரும்பும் அன்பர்கள் தங்களது தெளிவான விலாசத்தை 9886001357 என்ற எண்ணுக்கு SMS அனுப்பவேண்டும்.
- மாற்று மத அன்பர்களுக்கு இவ்விதழ் ஒரு வருடம் வரை அன்பளிப்பாக அனுப்பி வைக்கப்படும். தொடர்ந்து பெறவிரும்பினால் அவர்கள் SMS மூலம் RESEND QNM என்று டைப் செய்து அனுப்பவேண்டும். சந்தா அனுப்பத் தேவையில்லை.
- முஸ்லிம் அன்பர்களுக்கு 4 மாதம் வரை இவ்விதழ் இலவசமாக அனுப்பிவைக்கப்படும். தொடர்ந்து பெறவிரும்புவோர் சந்தா அனுப்பி புதுக்கிக் கொள்ள வேண்டும்.

- ஓராண்டு சந்தா : Rs. 60-
- ஈராண்டு சந்தா Rs.120-

Published from:

**House of Peace,**

PO Box no. 1726,

No.8, 4th main, 2nd cross, LB Sastri nagar,

Bangalore 560017

**Ph. 9886001357 email: amkasim@yahoo.com**

## திருக்குர்ஆன் நற்செய்தி மலர்

தேவைப்படுவோர் தொடர்பு கொள்ளவும்

கோலார் தங்கவயல்: சகோ.பஷீர் அஹ்மத் 9845217262<br>
ஓசூர் : சகோ. ர.ஃபீக் - 9994713191<br>
தர்மபுரி: சகோ, அய்யூப் 9842627171<br>
கோவை : சகோ. ஜுல்.ஃபிகர்-8015714648<br>
மதுரை: சகோ. ஆதில்- 9043967747<br>
திருப்பூர் : சகோ. ஷேக் தாவுத் - 9150068919<br>
திருச்சி : சகோ. திருச்சி முஸ்த.ஃபா -9865446344<br>
குன்னூர்: சகோ. அப்துல் ரகுமான் - 9843622246<br>
சென்னை: அப்துல் அக்பர் .ஃபிர்தௌசி- 9944656942<br>
அப்துல்லாஹ் .ஃபிர்தௌசி- 9894442844<br>
சேலம் : சகோ. இப்ராஹீம் - 9994091364<br>
தஞ்சாவூர்,கும்பகோணம்: சகோ. அப்துல்சலாம் - 9597285160<br>
விழுப்புரம்: சகோ. அப்துல் கனி - 9790290002<br>
திருநெல்வேலி: சகோ. ரி.ஃபாயி - 9840911985<br>
ஈரோடு: சகோ. ஷேக் தாவுத் - 7373947869<br>
மயிலாடுதுறை: சகோ. அமீர் ஹம்சா - 9942941190

Printed, published & edited by A.Mohamed Kasim on behalf of House of Peace, published from House of Peace, #8, 4th Main, 2nd cross, LB Sastry Nagar, Bangalore 560017 and printed at Print-O-Graph, Balaji complex, Sultanpet, Bangalore.

Registered News paper in India No.KARTAM/2007/28173

From
**House of Peace**
PO Box No. 1726
Bangalore 560 017

Registered news paper in India No. KARTAM/2007/28173
Regd under Postal Regn. No.KRNA/BGE/1057/2012-2014
posted at MBC Bangalore GPO b/w 25th to 27th of
every month. No of pages: 24+4
Licenced to post without prepayment License No.WPP-308

**(PRINTED MATTER)**

To

..........................................................................

..........................................................................

..........................................................................

..........................................................................

# விடுதலை! விடுதலை!

ஒருமுறை நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு முன்னால் ஒரு இறந்து போனவரின் சடலம் எடுத்துச் செல்லப்பட்டபொழுது அவர்கள் முஸ்தரிஹ், முஸ்தராஹ் மின்ஹு எனக் கூறினார்கள்.
இதைக் கேட்ட நபித்தோழர்கள்
“இறைத்தூதர் அவர்களே, அவ்வாறெனறால் என்ன?” எனக் கேட்டார்கள்.
அதற்கு நபி (ஸல்) அவர்கள் பின்வருமாறு கூறினார்கள்:
“ஒரு இறைவிசுவாசியான அடியார் இறப்பெய்தியதன் மூலம் உலகத்துன்பங்களிலிருந்து அவர் ஓய்வு பெற்றுவிடுகிறார்.
ஆனால் ஒரு கெட்ட அடியார் இறப்பெய்தியதன் காரணமாக மற்ற அடியார்களும் நகரங்களும், மரமும், கால்நடைகளும் அவரின் தீமையிலிருந்து விடுதலை பெற்று விடுகின்றன”

இதை நபித்தோழர் அபூகதாதா அவர்கள் அறிவித்தார்கள்
(நபிமொழி நூல் முஸ்லிம் ஹதீஸ் எண் : 466)